
# பொருளியல் நோக்கு

1984
ஏப்ரல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 10 இதழ் 1 ஏப்ரல் 1984

Appropriate Technology Services
P.O.T., POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1273

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## நிரல்

நிகழ்ச்சிக்குறிப்பேடு 2 - 33 மார்ச்/ஏப்ரல் 1984

## விசேஷ அறிக்கை

3 கனிப்பொருள் வளங்களும் அபிவிருத்தியும்

பேஸில் மாரசிங்க 7 இலங்கையிலுள்ள பொருளாதார கனிப்பொருள்களும் சார்புள்ள கைத்தொழில்களும்

## சிறப்புக்கட்டுரை

ஏ. டப். கிளெவுசன் 24 முன்னுரிமை வழங்க வேண்டிய பிரச்சினைகள் - 1984 உலக வங்கியின் கண்ணோட்டம்

## அடுத்த இதழில்

- ★ 1984 ல் இலங்கையின் பொருளாதாரம் — பிரதான போக்குகள் குறித்த ஒரு பரிசீலனை
- ★ இலங்கையின் கிராமியத்துறையில் கிராமிய வங்கிகளின் பங்கு
- ★ இலங்கையில் பாடசாலை, பல்கலைக் கழக கல்வி — சில குறிப்புக்கள்
- ★ மேலும் திறமையான ஒரு நிர்வாக சேவை

அட்டைப்படம்

வடிவமைப்பு: பாலித்த கன்னங்கரா

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின்சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

**மார்ச்**

28. இலங்கைக் கரைக்கப்பால் எண்ணெய் வளமுள்ளதாவென ஆராய்வதற்காகப்புவிப் பௌதிகப் பரிசீலனைகளை நடத்துவதற்கு நிதி உதவியும், தொழில் நுட்ப உதவியும் பெறுவதற்காக இலங்கைப் பெற்ரோலியம் கூட்டுத்தாபனம் பெற்ரோ - கனடா சர்வதேச உதவிக் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்தது. இப் பரிசீலனைகளுக்கு ஏறக்குறைய 16 இலட்சம் 80 ஆயிரம் கனேடிய டொலர்கள் செலவாகுமென மதிப்பிடப் படுகிறது.

30. பிரிட்டிஷ் அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் பரிவர்த்தனைசெய்து கொண்ட கடிதங்களில், கொழும்பு விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்துக்காக 53 இலட்சம் டொலர் (ஏறக்குறைய 19 கோடி 5 இலட்சம் ரூபா) பெறுமதியுள்ள கொடைக்கான ஒப்பந்தமொன்று முடிக்கப்பட்டது. இக்கொடை புதிய ஓடு பாதைக்கும் முடிவுக் கட்டடத்திட்டத்துக்குமான உபகரணங்களுக்கும் தொடர்பான சேவைகளுக்கும் ஆகும் செலவுகளில் ஒரு பகுதியைச் சமாளிக்கும்.

31. குடிஜன மதிப்பு - புள்ளி விவரத் திணைக்களம் கணக்கிட்டவாறு, 1984 மார்ச் மாதமுடிவில் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் (கொழும்பு நுகர்வோரின் விலைக் குறியீட்டெண்) 542.1 ஐ எட்டிவிட்டது. இது 1983 மார்ச் மாத முடிவில் 450.0 ஆகவும், 1982 மார்ச் மாத முடிவில் 407.5 ஆகவும் இருந்ததென்பது கவனிக்கத்தக்கது.

**ஏப்ரல்**

1. தெரிவு செய்யப்பட்ட எரி சக்திக்காப்புப் பொருள்கள் மீது இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டுள்ளனவென்று அரசாங்கம் அறிவித்தது. ஜெனரேட்டர்கள், மோட்டர்கள், மின்சாரப் பொருள்கள், மின்சார உபகரணங்கள், உறிஞ்சியொளி வீச (புளோரஸண்ட்) விளக்குகளுக்கான தொடக்கிகள் போன்ற மின்பாகங்கள் ஆகியவற்றின் மீது இறக்குமதித் தீர்வைகள் 7½ சத விகிதத்திலிருந்து 5 சத விகிதத்துக்கும், உறிஞ்சியொளி வீசு விளக்குகளுக்கான விளக்குப் பிடிகள் மீது 60 சத விகிதத்திலிருந்து 5 சத விகிதத்துக்கும் குறைக்கப்பட்டன; உறிஞ்சியொளி வீச விளக்குகள் மீது தீர்வை 15 சத விகிதத்திலிருந்து 5 சத விகிதத்துக்குக் குறைக்கப்பட்டது.

குடும்ப அடிப்படையில், வாழ்க்கைச் செலவுப் படியில் மாதமொன்றுக்கு 102 ரூபாவை அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்தது. இது 1984 மார்ச் 1ந் திகதியிலிருந்து அமுலாகும். இதன்படி, விவாகமாகாத ஊழியர்களும் விவாகமான ஊழியர்களும் (இவர்களுடைய கணவன்மார் அல்லது மனைவிமார் வாழ்க்கைச் செலவுப்படி கொடுபடும் அரசாங்க அல்லது தனியார் துறையில் வேலைக்கமர்ந்திருப்பின்) இந்த அதிகரிப்பில் 50 சத விகிதத்தைப் பெற உரித்துடையவர்களாவர். மற்றும் அரசாங்க ஊழியர்களும் ஓய்வு ஊதியம் பெறுவோரும் முழுப்படியும் பெற உரித்துடையவர்கள். முன்பு சகல ஊழியர்களுக்கும், அவர்களுடைய குடியியல் நிலை எப்படியிருந்த போதிலும் (அதாவது அவர்கள் விவாகமானவர்களாகவோ அல்லது விவாகமாகாதவர்களாகவோ இருந்த போதிலும்), வாழ்க்கைச் செலவுப் படியின் சமத்தொகை வழங்கப்பட்டது.

2. 33 வது வருடாந்த பட்டா (பசுபிக் பிரதேச பிரயாண அதிகார சபை) மகாநாடு கொழும்பில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அவர்களால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேயிலை, றப்பர், தென்னந் தோட்டங்களிலுள்ள பெண் தொழிலாளர்களின் சம்பளங்கள் 1984 ஏப்ரல் 2 ம் திகதியிலிருந்து ஆண் தொழிலாளர்களின் சம்பள மட்டத்துக்கு அதிகரிக்கப்படும். இதனால் அரசாங்கத்துக்கு வருடந்தோறும் மேலும் 42 கோடி 90 இலட்சம் ரூபா செலவு ஏற்படும். தோட்டத் தொழிலாளர்களின் சம்பளங்களை உயர்த்துவதற்கும் ஆண்பெண்களின் சம்பாத்தியங்களைச் சமப்படுத்துவதற்கும் செய்யப்பட்ட இம் முடிவு சரித்திரப் பிரசித்தியுள்ளதென்று அரச தோட்டத்துறை அமைச்சும், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சும் விடுத்த செய்தியறிக்கையொன்று கூறியது.

3. ஏப்ரல் 1 ம் திகதி ஆரம்பமாகும் 12 மாத காலத்தில் 2,40,000 மெட்ரிக் தொன் சுத்திகரியாத எண்ணெயைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கைப் பெற்ரோலியம் கூட்டுத்தாபனம் மலேசியாவின் தேசிய எண்ணெய்க் கூட்டுத்தாபனமான பெற்ரோனசுடன் 75 கோடி ரூபா மதிப்புள்ள ஒப்பந்தமொன்றை முடித்தது என்று இலங்கைப் பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்தலைவர் அறிவித்தார்.

இலங்கை உல்லாசப் பயண சபை அங்கீகரித்தவாறு, ஹோட்டல்கள், விருந்தினர் விடுதிகள் மீதான மொத்த வியாபாரவரி விகிதம் 10 சத விகிதத்திலிருந்து 5 விகிதத்துக்கு மேலும் குறைக்கப்பட்டு, அமுலுக்கு வந்தது. இந்த வரி விகிதம் 15 சத விகிதத்திலிருந்து 10 சத விகிதத்துக்கு குறைக்கப்பட்ட முந்திய முடிவு 1983 அக்டோபர் மாதத்தில் அறிவிக்கப்பட்டது. 1983 ஜூலை மாதத்தில் ஏற்பட்ட குழப்பங்களின் விளைவாக இங்கு வரும் உல்லாசப்பயணிகளின் தொகை குறைந்ததனால் மோசமாகப்பாதிக்கப்பட்ட ஹோட்டல் கைத்தொழிலுக்கு நிவாரணம் வழங்குவதே இந்த மாற்றத்தின் நோக்கமாகும்.

7 துரிதப்படுத்திய மகாவலித்திட்டத்தின் கீழ் உள்ள பிரதான செய்திட்டங்களில் ஒன்றான விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீர் நிறைக்கப்பட்டது. அணைக்கட்


(33 ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரீயம்



உப்பு



சுண்ணக்கல்



இரத்தினக்கல்



களிமண்

# கனிப்பொருள் வளங்களும் அபிவிருத்தியும்

இலங்கையின் பரிமாணம் ஒப்பியல்ரீதியாகச் சிறிதாயிருந்த போதிலும், அது நியாயமான அளவில் கனிப்பொருள் வளங்களைக் கொண்டுள்ளது. அதன் பயனாக, கனிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட பலகைத் தொழில்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. எனினும், இவ் வளங்கள் இன்னும் பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை. இத்துறையில் பெரும் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் இருந்து வருகின்றன வென்று இன்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூற்றுண்டின் ஆரம்ப தசாப்தங்களில், கனிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் முயற்சிகளை ஸ்தாபிப்பதற்கு இலங்கையில் எந்தக் கனிப்பொருள்களும் இல்லையெனக் கருதப்பட்டது. இரண்டாவது உலக மகாயுத்தத்திக்கு முன்பு, காரீயச் சுரங்கந் தோண்டுதல், உப்பு உற்பத்தி, பாரம்பரிய குடிசையளவில் நடைபெற்றுவந்த மட்பாண்டங்கள் வனைதல், ஓடு உற்பத்தி ஆகியவற்றைத்தவிர, நாட்டில் கனிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட எந்தக் கைத்தொழில்களுமே இருக்கவில்லை.

புராதன சிங்கள மன்னர்கள் காலத்திலிருந்து இரும்புத்தாதுகள், களிமண்கள் போன்ற சில கனிப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனவென்பதற்குச் சான்றுகள் இருந்தபோதிலும், ஒழுங்கான முறையில் எந்தக்கைத்தொழில்களையும் தொடங்க இலங்கையில் கனிசவளங்கள் உள்ளனவாவென்று ஆராய்ந்தறிய உண்மையில் எந்தப் பாரதூரமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இதன் நிகரவிளைவாக, நாட்டுக்குத் தேவையான சிமெந்து, மட்கலங்களுடன் ஓடுகள், செங்கற்கள் கூட இந்தியாவிலிருந்தும் பிரிட்டன், சீனா, ஜப்பான் போன்ற தூரத்திலுள்ள நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டன. இந்த நிலைமைக்கு ஓர் அடிப்படைக் காரணம், எந்த முறையான பூகர்ப்பப் பரிசீலனையும் நடத்தப்படாதது தான். ஆதலால், இலங்கையிலுள்ள கனிப்பொருள் வளங்களைப்பற்றியும் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் எந்த மதிப்பீடும் சாத்தியமில்லாதிருந்தது. இரண்டாவது உலக மகாயுத்தம் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. பிரதானமாகப் பொருள்களைக் கப்பலேற்றுவதிலும் வெளிநாடுகளிருந்து பெறுவதிலும் இருந்து வந்த கஷ்டங்களின் காரணமாக இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டதால், இலங்கையில் பல முன்னோடித் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன; இவற்றினிடையே பீங்கான் பாத்திரங்களையும் செங்கற்களையும் ஓடுகளையும் உள்நாட்டில் கிடைக்கும் மூலப்பொருள்களை உபயோகிப்பதன் மூலம் உற்பத்தி செய்வதற்குரிய தொழிற்சாலைகளும் இருந்தன. இந்த முனையிலிருந்து கனிப்பொருள்களைத் தோண்டியெடுத்துப் பயன்படுத்தும் முயற்சிகள் உத்வேகம்பெற்றன. போர் நின்றதும், இலங்கையில் என்ன கனிப் பொருள்கள் கிடைக்கக் கூடியனவாயுள்ளன என்பதையும் அவற்றைக் கைத்தொழில் எவ்வாறு உபயோகிக்க முடியும் என்பதையும் கண்டறிய முழு மூச்சான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் பயனாக இலங்கையில் முழு அளவிலான பூகர்ப்பப் பரிசீலனையொன்றை நடத்தும் முயற்சிகள் ஆரம்பமாயின.

ஏறக்குறைய இந்நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து கனிப்பொருள்களுக்கான தேடுதல் ஒரு முறைப்படி நடைபெற்றது. ஆனால், பூகர்ப்ப அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த பிரபல பூகர்ப்ப இயலாளரான ஜே. பி. ஆர். பொன்சேகா 1977 ம் ஆண்டில் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கக் கூட்டத்தில் நிகழ்த்திய தலைமையுரையொன்றில் கூறியவாறு.

"இந்நூற்றுண்டின் முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் பெரும்பகுதி, பொருளாதாரப் பெறுமதியுள்ள துருவலான கனிப்பொருள்களை அல்லது வெளிப் பண்டையைச்சேர்ந்த கனிப்பொருள்களைத் தேடுவதற்காக நாட்டின் குறுக்கும் நெடுக்குமாகப் பயணங்கள் செய்வதற்கே அர்ப்பணிக்கப்பட்டது. கண்டுபிடிக்கப்பட்ட கனிப்பொருள்கள், கடந்து செல்லப்பட்ட பிரதேசங்கள், எந்தெந்த ஆறுகளிலும் அருவிகளிலும் கடற்கரைகளிலும் மணல் எடுத்துத் தட்டில் போட்டுக் கழுவிப் பார்க்கப்பட்டது என்பது பற்றிய விவரங்கள் வருடாந்த கனிப்பொருள் பரிசீலனை அறிக்கைகளில் குறித்துவைக்கப்பட்டன. இந்த வேலையைக் குமாரசுவாமி, பார்ஸன்ஸ், வேலண்ட் ஆகியோரே பெரும்பாலும் செய்தனர். பெரும் கண்டுபிடிப்புகள் எதுவும் செய்யப்படவில்லை. ஆனால், நாட்டில் கண்டுபிடிக்கக் கூடிய பூகர்ப்ப வளங்களைப் பற்றியும், பொருளாதார மதிப்புள்ள கனிப்பொருள்களின் இயல்தகு மூல வளங்களைப்பற்றியும் இவ்வூழியர்களால் நிறையத் தகவல்களைச் சேரிக்க முடிந்தது. கனிப்பொருள்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் அடுத்த முக்கியமான நடவடிக்கை 1940 க்களில் எடுக்கப்பட்டது. இது மிக ஒழுங்கான அடிப்படையில் அமைந்ததாகும். நாட்டின் தென்மேற்குப் பகுதியில் அற்ப அளவிலிருந்த லிமொனைட் இரும்புத்தாதுகள், சீனக்களிமண் படிவுகள், கடற்கரைகளிலுள்ள கனிசப் படிவுகள், முத்துராஜவெல முற்றுநிலக்கரிப் படிவுகள் போன்ற பொருளாதார மதிப்புள்ள உள்ளார்ந்த கனிப்பொருள்களை அப்பொழுதிருந்த அரசாங்க அதிபர் வாடியா தமது சக ஊழியர்களுடன் இனங்கண்டார். பூகர்ப்ப வளங்களை ஆராய்ந்து மதிப்பிடும் அளவில் படவரைதலும் ஆரம்பமாயிற்று. பாறைகளின் கனிசவர்க்கம் பற்றியும் எதிர்காலத்தில் கனிப்பொருள் வளங்காணும் முயற்சிகளுக்கான வழி காட்டிகள் பற்றியும் மிகுந்த தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வேலை பல வருடங்கள் வரை துரிதமடைந்து வந்தது. அடுத்த நடவடிக்கை 1956 ம் ஆண்டில் எடுக்கப்பட்டது. அப்போது, கொழும்புத் திட்டத்தின் தொழில் நுட்ப உதவி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கனடா அரசாங்கம் நாட்டின் விமானப் பரிசீலனையொன்றை நடத்தும் பணியை ஒரு கம்பெனியிடம் ஒப்படைத்தது. 1:40,000 என்ற அளவிடையில் ஸ்டீரியோ பெயர்களும் 1:31,680 என்ற அளவிடையில் பலவர்ணக்கல் வடிவமைப்புகளும் பலதிணைக்களங்களுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கபபட்டன. ஒளிப்பட விளக்க உத்திகளில் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கப் பட்டது."

இவ்வேலையையடுத்து மறு வருடம் நாட்டின் தென் மேற்குப் பகுதியில் 8,958 சதுரமைல் பரப்பை உள்ளடக்கி, ஆகாயத்திலிருந்து புவிப்பௌதிக பரிசிலனை நடத்தப்பட்டது. அதன்விளைவாக, சுமார் 40 முக்கியமான சீரில்லா அமைப்புகள் கவனிக்கப் பட்டன. 25 வரையான மிக முக்கியமான சீரற்ற அமைப்புகள் காந்தமானி முறைகள் மூலம் ஆராயப்பட்டன. 1959 ம் ஆண்டில் விலகெதரையில் காந்தமானி மூலம் தரைப் பரிசிலனையொன்று நடத்தப்பட்டது. அங்கே புவியமைப்புப்படம் வரையப்பட்ட போது, பட்டைகொள் மக்னடைட் பேரைட் படிவொன்று காணப்பட்டது. இந்தக்கண்டு பிடிப்பும், அடுத்து அந்தப் படிவு இருப்பதை நிரூபித்த காந்தமானிப் பிரயோகமும் வைரந்துளைக்கும் வேலையும் நாட்டின் கனிப்பொருள் வள ஆராய்ச்சி வேலைகளில் சில முக்கிய சம்பவங்களைக் குறித்தன. அதாவது, கனிப்பொருள் வளங்காணும் முயற்சிகளை விஞ்ஞான முறைப்படி மேற்கொண்டால், என்னபெறுபேறுகளைச் சாதிக்க முடியும் என்பதையும், பொருளாதாரப்பெறுமதியுள்ள (ஒரு குறிப்பிட்ட வகை) உலோகந்தரும் படிவுகள் நாட்டின் கேம்பிரியகாலத்துக்கு முந்திய பாறைகளில் உள்ளன என்பதையும் அது எடுத்துக்காட்டியது. 1960 களின் முற்பகுதியில் காந்தமானியாலும் வைரத் துறப்பணத்தாலும் நிலத்தைத் துளையிடும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. இவ்வேலைகள் அக்காலத்திலே அறியப்பட்டவரை இலங்கையில்மிகப் பெரிய அளவிலான காந்த இரும்புக் கனிசப் படிவு இருப்பதை நிரூபித்தன. அதற்குப் பிந்திய வருடங்களில் மேலும் வேலைகள் நிறைவேற்றப்பட்டன. நிரூபிக்கப்பட்ட காந்தக்கனிகளின் நிறை ஐம்பது இலட்சம் தொன் வரை இருப்பதை அது எடுத்துக்காட்டியது.

அதன்பின், இலங்கையில் புதிய கனிப்பொருள் படிவுகளைக் கண்டுபிடிக்கும் வேலைகள் சுமார் இரு தசாப்தங்களுக்கு மேல் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இலங்கையில் பெறுமதியான பல கனிசப் படிவுகள் உள்ளன; அவற்றைப் பொருளாதாரரீதியில் பயன்படுத்த முடியும் என்பதைப் பரிசிலனைகள் எடுத்துக்காட்டியுள்ளன. கடந்த அறுபது வருடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள கனிப்பொருள்களை இரு விரிவான தொகுதிகளாகப் பிரிக்கலாம்:

(1) கடினமான பாறைகளிலுள்ள படிவுகளிடத்துக் கண்டு பிடிக்கப்பட்ட கனிசங்கள்.

(2) வானிலையால் அழியும் பாறைகளிலிருந்து பெறப்படும் வண்டலான படிவுகளில் கண்டு பிடிக்கப்பட்ட கனிசங்கள்.

முதலாவது தொகுதியைச் சேர்ந்த கனிப்பொருள்கள் - சுண்ணும்புக்கல், தொலமைட், மக்னடைட், நாளப்படிகம், மைக்கா இரும்புத் தாதுப்பொருள்கள், காரீயம், பாறை பொஸ்பேட், நெளிந்து நெளிந்து செல்லும் பாம்புப் பாறை ஆகியன. இரண்டாவது தொகுதியைச் சேர்ந்த கனிப்பொருள்கள் - களிமண் வகைகள், கனிசமணல், சிலிக்கா மணல் வகைகள், இரத்தினக்கற்கள் ஆகியன.

இலங்கையின் கனிப்பொருள் வளங்களில் சுரங்கமறுப்பதன் மூலமும் குழிப்பார்களிலிருந்து கல்லெடுப்பதன் மூலமும் பொருள்களின் பெறுமதி வருடந்தோறும் பதிவுசெய்யப்படுகிறது. இது நாட்டின் மொத்தத் தேசியப் பொருளாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்யும் ஒரு காரணி. சுரங்க அகழ்வுகளிலிருந்தும் குழிப்பார்கள் குடையப்படுவதிலிருந்தும் செய்யப்படும் பங்களிப்பை மத்திய வங்கி ஆண்டு தோறும் மதிப்பிடுகிறது. இந்த மதிப்பீட்டைக் கீழே உள்ள அட்டவணையில் காணலாம்.

இத்துறையிலிருந்து செய்யப்படும் பங்களிப்பின் பெறுமதி 1970 ம் ஆண்டுக்கும் 1983 ம் ஆண்டுக்குமிடையே படிப்படியாகச் சுமார் எட்டுமடங்கு அதிகரித்துள்ளது. 1970 ம் ஆண்டில் 9 கோடி 50 இலட்சம் ரூபாவென மதிப்பிடப்பட்ட சுரங்க அகழ்வினதும் கல்லெடுப்பினதும் பெறுமதி 1983 ம் ஆண்டளவில் 80 கோடி ரூபாவை எட்டியதாக மதிப்பிடப்பட்டது.

கனிப்பொருள்கள் துறையிலிருந்து செய்யப்படும் பங்களிப்பின் பெறுமதி கடந்த 6 வருடங்களில் வேகமாக அதிகரித்துள்ளது. ஏனென்றால், நிர்மாணக் கைத்தொழிலுக்காக இவ்வளங்கள் மிகக்கனத்த அளவில் பயன்படுத்தப்பட்டன; பொஸ்பேட் உரங்

நிலையான (1970) காரணிச்செலவு விலைகளில், சுரங்கத் தொழிலும் கல்லெடுப்புத் தொழிலும் மொத்தத் தேசிய உற்பத்திக்குச் செய்தபங்களிப்பு.

| ஆண்டு | சுரங்க அகழ்வினதும் கல்லெடுப்பினதும் பெறுமதி (பத்து இலட்சம் ரூபா) | மொத்தத் தேசிய உற்பத்தி (பத்து இலட்சம் ரூபா) |
|---|---|---|
| 1970 | 95 | 13,187 |
| 1975 | 395 | 14,987 |
| 1980 | 684 | 19,575 |
| 1981 | 713 | 20,706 |
| 1982 | 742 | 21,756 |
| 1983 | 800 | 22,824 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், பீங்கான் சாமான்கள், கனிப் பொருள் மணல் ஆகியன சம்பந்தமாக புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; காரியமும் நவரத்தினங்களும் தொடர்ந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. எனினும், இப்போதிருந்து வரும் பல கனிப்பொருள்வளங்கள் இன்னும் குறைவாகவே பயன் படுத்தப்படுகின்றன அல்லது பயன் படுத்தப்படவேயில்லை; அதன் விளைவாக நாடு கிடைக்கக்கூடிய நன்மைகளை இழந்து வருகிறதென்ற கருத்துக்களும் தெரிவிக்கப்படுகின்றன. இந்த வளங்களைக் கொண்டு, நிரந்தர விஞ்ஞான அடிப்படையில் கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்கும், மூலப் பொருள்கள் தொகையாகவோ அல்லது அரைவாசி நிறைவாக்கப் பட்ட நிலையிலோ வெளியே அனுப்பப்படாது, சேர்த்த பெறுமதியிலிருந்து ஆகக்கூடிய நன்மையைப் பெறுவதற்காக இங்கேயே பதப்படுத்தப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு நெருக்குதல்கள் இருந்து வருகின்றன. மொறட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேஸில் மாரசிங்க அடுத்துவரும் ஆராய்ச்சிக் கட்டுரையில் எடுத்துக்காட்டுவதுபோல, கிடைக்கும் கனிச வளங்களைப் பதப்படுத்தினுல் அவற்றின் பெறுமதி இருபது மடங்கு அல்லது அதற்கு மேல் அதிகரிக்கலாம். உள்நாட்டுக் கனிப்பொருள்களின் உள்ளார்ந்த வளம் பூரணமாகப் பயன் படுத்தப்படாததற்குரிய காரணங்களாக அவர் கீழ்க்கண்ட காரணிகளையும் பட்டியலிட்டுக் காட்டுகிருர்: மூலதனப்பற்றுக் குறை, கடந்தகாலத்திலே தொழில்நுட்ப உத்திகள் கைக்கு எட்டாதிருந்தமை, தொழில் முயற்சித் திறனின் குறைவான மட்டம், பிரதிகூலமான சர்வதேச சூழல் ஆகியன அக்காரணிகளில் சிலவாக இருந்திருக்கலாம். பயன்படுத்தக்க கொள்கை சரிக் கட்டப்படுவதை அரசியல், சமூக நெருக்குதல்கள் தடுத்திருக்கலாம். இன்னொரு குறிப்பிடத்தக்க காரணி, இலங்கையிலுள்ள வரையறுத்த சந்தை வசதியும் புதிய



இரத்தினக்கல் அகழ்வால் ஏற்படும் சூழல் நாசம்

உள்நாட்டுக் கைத்தொழில்கள் இறக்குமதி செய்யப்படும் பொருள்களிலிருந்து வரும் போட்டியை எதிர் நோக்க வேண்டிய நிலைமையுமாகும்.

இந்தக்கனிப்பொருள்களில் பல வற்றிற்கான ஏற்றுமதி வாய்ப்புகள் 1983 - 87 க்கான தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன. ஏற்றுமதிகளின் உள்ளார்ந்த பெறுமதி 1987 ம் ஆண்டளவில் 250 கோடி ரூபாவை மிஞ்சிவிடுமென்று எதிர் பார்க்கப்படுகிறது - நவரத்தினங்களினதும் ஆபரணிங்களினதும் ஆகக் கூடிய ஏற்றுமதிகளிலிருந்து 150 கோடி ரூபாவும், பீங்கான் சாமான்களின் ஏற்றுமதியிலிருந்து 47 கோடி 30 இலட்சம் ரூபாவும், சிமெந்து ஏற்றுமதியிலிருந்து 30 கோடி ரூபாவும், காரீயத்திலிருந்து 18 கோடி ரூபாவும், கனிப் பொருள் மணலிலிருந்து 11 கோடி ரூபாவும், உப்பிலிருந்தும் உப்புமூல இரசாயனப்பொருள்களிலிருந்தும் 2 கோடி ரூபாவும் வருமானமாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உள்ளார்ந்த ஏற்றுமதி வாய்ப்பை எவ்வாறு சாதிக்க முடியும்? இலக்குகளை எவ்வாறு அடைய முடியும்? என்பது, குறித்த திட்டத்திலிருந்து எடுத்து அடுத்துவரும் கட்டுரையில் வெளியிடப்படும் பகுதிகளில் விளக்கப்படுகிறது.

## சூழல்பிரச்சினைகள்

பூமியின் செல்வப் பயன்படுத்தப்படுவதன் விளைவாகத் தோன்றும் ஒரு பெரிய சமூகப் பிரச்சினை சூழலுக்கு ஏற்படும் அபாயங்களாகும்.

உதாரணமாக, காரீயம், நவரத்தினங்கள் ஆகிய இரு சுரங்க அகழ்வுகளிலும் குழிகள்வெட்டப்பட்டு, விரைவில் கை விடப்படுவதனுல் நுளம்புகள் உற்பத்தியாகி வளர்வதற்குரிய இடம் ஏற்படுவதுடன் பொதுச் சுகாதாரத்தைப் பாதிக்கும் அபாயமும் தோன்றுகிறது. இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்ற காலம், காரீயக் கைத்தொழில் செழித்தோங்கிச் சுபிட்சநிலை எய்திய ஆண்டுகளாகும். அப்போது, சுரங்கந் தோண்டும் நடவடிக்கைகள் வெகுவாக அதிகரித்தன. இக்காலத்தில் சுமார் ஓராயிரம் குழிகள் தோண்டப்பட்டன. ஆனுல் மகாயுத்தம் நின்றபின் இவற்றின் தொகை இருபத்தைந்துக்கும் குறைவாக வீழ்ச்சியடைந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலுள்ள பொருளாதாரக் கனிப்பொருள்களும் சார்புள்ள கைத்தொழில்களும்

பேஸில் மாரசிங்க

சுரங்கத் தொழில், கனிச எந்திரவியல் பகுதி மொறட்டுவ பல்கலைக்கழகம்.

*"பாரம்பரியமற்ற ஏற்றுமதித் துறையில் கணிசமான முயற்சியொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கையில் ஏற்றுமதி வழிப்படுத்திய வளர்ச்சி, உள்நாட்டு மூல்வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்வதிலும், நாட்டின் பூகோள நிலை காரணமாக ஸ்தல அனுகூலங்களை அனுபவிக்கும் நடவடிக்கைகளை ஊக்குவித்து வளர்ப்பதிலும், நாட்டிலுள்ள படித்த - இசைவுத் திறனுள்ள ஆள்பலத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வதிலும் முழுக் கவனஞ் செலுத்த வேண்டியிருக்கும். எமது நாட்டிலுள்ள கனிப்பொருள் வளங்களும் கடல் வளங்களும் இன்னும் பூரணமாகப் பயன்படுத்தப்படாததால், இத்துறைகளில் வளர்ச்சிக்குப் பெருமளவு வாய்ப்புகள் உள்ளன. காரீயம், இல்மனைட், அபடைட், களிமண், ஸிலிக்கா மணல் போன்ற பல உயர் சிறப்பு வாய்ந்த கனிப் பொருள்கள் இன்னும் திருப்திகரமாகப் பயன்படுத்தப்படவில்லை."*

*நிதியமைச்சர் திரு. ரொனி டீ மெல் 1984 ம் வருட வரவுசெலவுத் திட்டப் பிரசங்கம்.*

இலங்கையின் பரிமாணம் சிறிதாயிருந்த போதிலும் இந் நாட்டில் நியாயமான அளவில் கனிசப் படிவுகள் உள்ளன. இப் படிவுகளில் சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு ஏராளமான கைத்தொழில்கள் நாட்டில் நிறுவப்பட்டுள்ளன. இலங்கை அதிக பொருளாதார சுதந்திரத்தை எய்தி, அத்தியாவசியமாகத் தேவைப்படும் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்து வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கட்டுப்படுத்தும் அதே சமயத்தில் சுபிட்ச நிலையை நோக்கிச் செல்ல வேண்டுமாயின், இந்தக் கைத்தொழில்கள் விஞ்ஞான அடிப்படையில் விரிவாக்கப்படுவது அத்தியாவசியமாகும். சில முக்கிய கனிப்பொருள் கைத்தொழில்கள் இதனை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுத்து வருவதைக்காண மகிழ்வுண்டாகிறது.

கனிச மணலையும் காரீயத்தையும் உப்பையும் பொஸ்பேட்டையும் ஆதாரமாகக் கொண்ட கைத்தொழில்கள் உற்பத்தியை விரிவாக்குவதற்காக வெளிநாட்டு ஒத்துழைப்பை ஈர்க்கும் பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. தற்போதுள்ள அரசாங்கம் வெளிநாட்டு முதலீடுகளுக்கு மிகவும் சாதகமான ஒரு சூழ்நிலையை உண்டாக்கியிருப்பதால், மற்றக் கைத்தொழில்களும் இதைப் பின்பற்றி நடக்குமென்று எதிர்பார்க்கலாம். இலங்கையின் கைத்தொழில் கனிப்பொருள்களைப் பொறுத்தவரை, அவற்றின் முழு உள்ளார்ந்த வளமும் இன்னும் உணரப்படவில்லை. இந்த ஆராய்ச்சிக்கட்டுரையில், இலங்கையிலே உள்ள முக்கியமான கனிசப்படிவுகளைப்பற்றிய சுருக்கமான விவரமும், சார்புள்ள கைத்தொழில்களைப் பற்றிய சுருக்கமான விளக்கமும், மேலும் அபிவிருத்தி செய்வதற்குள்ள சாத்தியக் கூறுகளும் தரப்படுகின்றன.

## அபடைட்

1971'ம் ஆண்டில் பூகர்ப்ப அளவைத் திணைக்களம் எப்பாவலையில் பொஸ்பேட் பொதிந்துள்ள கனிப்பொருளான அபடைட் மிகப்பெருமளவில் படிந்துள்ளதைக் கண்டு பிடித்தது. ஏறக்குறைய 6 கோடி தொன் நிறையுள்ள அபடைட் அங்கு சேமிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் படிவு 3 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் பரவியுள்ளதாக ஆரம்ப பரிசீலனைகள் எடுத்துக் காட்டின. துளையிட்டுப் பார்த்த போது, இப்படிவு பூமியின் மேற்பரப்பிலிருந்து 400 அடி ஆழம் வரை அல்லது அதற்கு மேற்பட்ட ஆழம் வரை பரந்துள்ளதாகத் தெரியவந்தது.

அபடைட்டின் பொதுச் சூத்திரத்தை சி எ 5 (பி ஓ 4) 3 (எப், சி 1, 04) என்று குறிப்பிடலாம். குளோரீன் அயனிகளும் புளோரீன் அயனிகளும் ஹைட்ரோக்ஸில் அயனிகளும் முறையே குளோரர் அபடைட், புளோரர் அபடைட், ஹைட்ரோக்ஸி அபடைட் எனப்படும் தூய முடிவு அங்கங்களைக் கொடுப்பதற்காக ஒன்றையொன்றை மாற்றீடு செய்யவல்லன. இரசாயனப் பகுப்புகளிலிருந்து எப்பாவள அபடைட்டில் புளோரீனைவிட குளோரீன் அதிகமாக உள்ளது; ஆகவே, அதில் பெரும்பாலும் குளோரர் அபடைட்டே (சிஏ 053.8% P2 05 41% C1 6.8%) அடங்கியிருக்கலாம் எனத் தெரியவந்துள்ளது. பொஸ்பரஸ் தாவர உணவிலுள்ள மூன்று முக்கிய. மூலகங்களில் ஒன்ருகும். அது போஷாக்கு ஊட்டுவதில் உதவுகிறது; அத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன், குறிப்பாகத் தானியங்களின் மணிகள் (கனிகள்) முதிர்ந்து முற்றுவதைத் துரிதப்படுத்துகிறது. மேலும், பொஸ்பரஸ் வேர்த்தொகுயும் மற்றும் நிலக்கீழுள்ள அங்கங்களும் விருத்தியடைவதையும் ஊக்குவிக்கின்றது. கச்சா (பக்குவப்படுத்தாத) அபடைட்டின் கரைதிறன் குறைவாக இருப்பதால், உரமாக அதை நேரடியாக உபயோகிப்பது வரையறுக்கப்பட்டுள்ளது. ஆதலால், பாறை பொஸ்பேட் அதிக கரைதிறனுள்ள பொஸ்பேட்டாக மாற்றப்பட வேண்டும். இவ்விதமாகத் தாவரங்களுக்குக் கிடைக்கக் கூடிய பொஸ்பரஸின் அளவை அதிகரிக்க வேண்டும். கைத்தொழில் ரீதியாக, நுண்மையாக அரைத்த பாறை பொஸ்பேட், கந்தக அமிலம் (சல் பூரிக் அசிட்), ஹைட்ரோ குளோரிக் அமிலம், வெடியுப்பு அமிலம் (நைட்ரிக் அசிட்) அல்லது நேர்ப்பொஸ்பரிக் அமிலம் போன்ற கனிச அமிலங்களை ஊற்றி சூப்பர்பொஸ்பேட்டாக மாற்றுப்பட்டால், அது நன்ருகக் கரைகிறது. ஹைட்ரோ குளோரிக் அமிலம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும், கந்தக அமிலமே விரும்பப்படுகிறது. ஏனென்ருல், ஹைட்ரோ குளோரிக் அமிலத்தில், ஈரப்பதனை விரைவில் உறிஞ்சிவிடும் விரும்பத்தகாத தன்மையுள்ள கல்சியம் குளோரைட் ஒரு பக்கவிளைவாக அமைந்துவிடுகிறது. 1978 ம் ஆண்டில் சூப்பர் பொஸ்பேட்டை விருத்தி செய்யும் வேலையை அரசாங்க சுரங்கத்தொழில் - கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டது. இதில் கூடிவேலை செய்வதற்காக, கூட்டுத்தாபனம் அமெரிக்காவைச் சேர்ந்த அக்ரிகோ கெமிக்கல் கம்பெனியைத் தெரிவுசெய்துள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் 40 கோடி அமெரிக்கா டொலர் செலவாகுமென ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டது. ஏற்றுமதி செய்வதற்காக ஆண்டொன்றுக்கு 5,30,000 தொன் டயமோனியம் பொஸ்பேட்டையும், உள்நாட்டு உபயோகத்துக்காக ஆண்டொன்றுக்கு 50,000 தொன் மும்மடங்கு சக்தியுள்ள சூப்பர் பொஸ்பேட்டையும் உற்பத்தி செய்யவல்ல எந்திரத்தொகுதியை ஸ்தாபிப்பதென ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இச் செய்திட்டம் அரசாங்கத்தின் இறுதி அங்கீகாரத்திற்காக இன்னும் காத்திருக்கிறது. இதற்கிடையில், அரசாங்க சுரங்கத்தொழில் - கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 1978 ம் ஆண்டுக்குப்பின் அதிகரித்த அளவில் அபடைட்டை உற்பத்தி செய்துள்ளது. அபடைட்டின் வருடாந்த உற்பத்தி விவரம் கீழே தரப் படுகிறது.

| ஆண்டு | அளவு (மெட்ரிக் தொன்) |
|---|---|
| 1978 | 3,660 |
| 1979 | 8,671 |
| 1980 | 14,076 |
| 1981 | 15,294 |
| 1982 | 13,993 |
| 1983 | 15,727 |

**களிமண்**

இலங்கையில் நாலுவகைக் கைத்தொழில் களிமண்கள் இருக்கின்றன - சீனக்களிமண், பந்துக் களிமண், தீக்களிமண், வனைதற் களிமண் ஆகியன, சீனக் களிமண் அல்லது கயோலிநைட் (இதுசில சமயங்களில் கயோலின் என்று பிழையாகக் குறிப்பிடப்படுகிறது) பீங்கான் சாமான்களையும், வெண் மட்பாண்டங்களையும் உற்பத்தி செய்வதில் பிரதான மூலப்பொருளாக உபயோகிக்கப்படுகிறது. கயோலிநைட் (A12 03 2 SI02 2H2 0) படிவுகள் பொரலஸ்கமுவையிலும், மீதிய கொடைப் பகுதியிலும் பல்வேறு ஆழங்களில் ஓர் அடையலாக அமைந்திருக்கக் காணப்படுகின்றன. இப்படிவுகளில் படிகம், மைக்கா (அப்பிரகம் = காக்கைப் பொன்), களிக்கல் ஆகியனவும் இல்மனைட், மொனஸைட் போன்ற கனத்த கனிப்பொருள்களும் உள்ளன. கயோலி நைட்டைச் சுரங்கத்திலிருந்து எடுத்துப் பதப்படுத்தும் பணிகளை இலங்கை மட் பாண்டக் கூட்டுத்தாபனம் பொரலஸ்கமுவையிலும் மீதியகொடையிலுமுள்ள அதன் களிமண் சுத்தி செய்யும் தொழிற்சாலைகளில் நிறைவேற்றிவருகிறது. கயோலிநைட் கடதாசிக் கைத்தொழிலில் ஒரு மேல் பூச்சாகவும், வர்ணப் பசைகள் (தீந்தை) ப்றபசை போன்ற எண்ணற்ற பொருள்களை உற்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தி செய்வதிலும் உபபோகிக்கப்படுகின்றது.

ரப்பர்க் கைத்தொழிலும் நார்க்கண்ணுடி உற்பத்தியிலும் கூட அது உபயோகிக்கப்படுகிறது. இரசாயன ரீதியாக, பந்துக் களிமண் சீனக்களிமண்ணைப் போலவே இருக்கின்றது. வித்தியாசம், துகள் பரிமாணத்திலும் அசுத்தங்களின் அளவிலும் தான் உள்ளது. பந்துக் களிமண் என்ற பெயர் வந்ததற்கு அது ஆதியில் நிலத்திலிருந்து குற்றிகளாகவும் அல்லது பந்துகளாகவும் தோண்டியெடுக்கப்பட்டதே காரணம். பந்துக்களிமண் உறுதிக்கும் இளகு தன்மைக்கும் நன்ருகப் பிணிக்கும் வலுவுக்கும் உயர்வெப்பத்தைத் தாங்கும் சக்திக்கும் பெயர் பெற்றது. வெண் மட்பாண்டக் கைத்தொழிலில் ஒரு மூலப்பொருளாகச் சீனக்களிமண்ணுடன் சேர்த்து உபயோகிக்கப்படுகிறது. பந்துக் களிமண் படிவுகள் பொல்கொட, டெடியவல ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. வெப்பத்தைக் குறிப்பிடத்தக்கவகையில் எதிர்த்து நிற்கும் சக்தி படைத்த திக்களிமண் வெப்பத்தை அழிக்காத களிமண் என்று குறிப்பிடப்படுகிறது. சூளைகளிலும், உலைகளிலும் பொருத்தப்படும் வெப்பந் தாங்கும் பாகங்களை உற்பத்தி செய்வதற்கு அது உபயோகிக்கப்படுகிறது. மட்பாண்டங்கள் செய்வதற்காக உபயோகிக்கப்படும் வனைதற் களிமண் பக்குவப் படுத்தாத கச்சா நிலையில் அயச் சுண்ணம் (இரும்பு ஒட்சைட்) இருப்பதால், சிவப்பாகவோ பழுப்பு நிறமாகவோ அல்லது சாம்பல் நிறமாகவோ இருக்கிறது. சுடப்படும்போது, அதன் நிறம் இளஞ்சிவப்பிலிருந்து சிவப்பும் பழுப்பும் கலந்த நிறமாக மாறலாம். பிரதானமாக மட்பாண்டங்களின் உற்பத்திக்காகவே அது உபயோகிக்கப்படுகிறது.

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் இரு சீனக் களிமண் சுத்திகரிப்புச்சாலைகள் ஆண்டொன்றுக்கு 700 தொன் களிமண்ணை உற்பத்தி செய்கின்றது. கூட்டுத்தாபனத்தின் பிரதான தொழிற்சாலைகள் நீர்கொழும்பிலும் பிலியந்தலையிலும் அமைந்துள்ளன. ஓடுகளை உற்பத்தி செய்யும் சுமார் 10 தொழிற்சாலைகளையும் சுவரோடுகளை உற்பத்தி செய்யும் இன்னொரு 10 தொழிற்சாலைகளையும் அது கொண்டுள்ளது. வீட்டு மட்கல வகைகள், சுவரோடுகள், சுகாதாரத்தளவாடங்கள், சித்திர வடிவ ஓடுகள் மின்னியல் மட்கலங்கள், அலங்காரப் பொருள்கள் விநோத சாமான்கள் உட்பட மொத்தம் 7,000 தொன் மட்கலங்கள் கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்படுகின்றன. லங்கா பீங்கான் லிமிட்டெட் இரத்தோட்டையிலுள்ள அதன் தொழிற்சாலையில் பிரதானமாக ஏற்றுமதி செய்வதற்காகவே பீங்கான் சாமான்களை உற்பத்தி செய்கின்றது. பலாங்கொடையிலுள்ள லங்கா சுவரோடுகள் லிமிட்டெட்டின் உற்பத்திப் பொருள்களும் ஏற்றுமதிக்காகவே உற்பத்தி செய்யப்படுகின்றன.

கடந்த வருடம் மார்ச் மாதத்தில் இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் ஓர் உப நிறுவனமான தங்கொட்டுவ பீங்கான் (பிரைவேட்) லிமிட்டெட் ஆரம்பிக்கப்பட்டது. பீங்கான் சாமான்களை உற்பத்தி செய்வதற்கு ஆசியாவிலுள்ள மிகப் பெரிய தொழிற்சாலைகளில் ஒன்ருன இத்தொழிற்சாலை ஏற்றுமதி நோக்கமுள்ளதாகும். கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளபடி, ஏற்றுமதிக் கட்டளைகள் அமெரிக்கா, கனடா உட்படப் பல நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன.

### டொலோமைட்

டொலோமைட் கல்சியத்தையும் மக்னீஷியத்தையும் கொண்ட ஓர் இரட்டை கார்பனேட்டாகும். இப்படிவுகள் பிரதானமாக மலைநாட்டில் கண்டி, மாத்தளை போன்ற பகுதிகளிலும் அத்துடன் பதுளை, இரத்தினபுரி பகுதிகளிலும் காணப்படுகின்றன. இக்கனிப்பொருள் ஓர் உரம் என்ற முறையில் ஒரு பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும், அதன் உபயோகம் வரையறுத்ததாகவே உள்ளது. ஏனென்ருல், அதன் கரைதிறன் மிகக் குறைவாயுள்ளது. எனினும், தேய்த்துக் கழுவிச்சுத்தம் செய்யும்தூள், தளமினுக்கி, நீர் வர்ணங்கள், உலோக வார்ப்படச்சாலை செங்கற்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல், மக்னீஷியாவை உற்பத்தி செய்வது போன்ற மற்றும் பல நோக்கங்களுக்கும் ரப்பர்க் கைத்தொழிலில் நிரப்பிகளாகவும் டொலோமைட்டை உபயோகிக்கலாம். பொறி முறைப்படுத்திய கண்ணுடித் தொழிற்சாலைகளிலும் மட்பாண்டங்கள் - எனமல் - பீங்கான் கைத்தொழில்களிலும் அது உபயோகிக்கப்படுகிறது. மத்திய மாகாணத்திலுள்ள படிவுகளிலிருந்து ஆண்டுக்கு ஏறக்குறைய 15,000 தொன் டொலோமைட் பிரித்தெடுக்கப்படுகிறது. எனினும், இறக்குமதி செய்யப்படும் கீஸரைட்டும், வணிக எப்ஸம் உப்புகளும் அதிகமாக விரும்பப் படுவதால், அதன் உபயோகம் வரையறுக்கப்பட்டதாயுள்ளது. இந்நாட்டில் டொலோமைட்டை உற்பத்திசெய்யும் முறை மேலும் அபிவிருத்தி செய்யப்படுவதவசியம். ஒப்பீயல் ரீதியாகக் குறைந்த முதலீட்டோடும் நியாயமான அளவு குறைவான நடப்புச் செலவிலும் 250 அரிவலை டொலோமைட்டில் ஆண்டுக்கு ஏறக்குறைய 25,000 தொன்களை உற்பத்தி செய்வதற்காக, சிறு அளவிலான தொழிற்சாலையை ஸ்தாபிக்க வேண்டுமெனக் கைத்தொழில் அபிவிருத்திசபை யோசனைகளை வெளியிட்டுள்ளது.

### களிக்கல்

களிக்கல் பொதுவாக நீரில்லாத அலுமினியம் ஸிலிக்கேட்

(12-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி வாய்ப்புகள்

இத்தொகுதியில் வெண்மட்பாண்டங்கள், பீங்கான் பொருள்கள், கட்டமைப்புக் களிமண் பொருள்கள், கண்ணாடியும் கண்ணாடிப்பொருள்களும், சிமெந்து, சுண்ணாம்பு, சாந்து முதலியன அடங்கியுள்ளன. ஏற்றுமதி வாய்ப்புள்ள பொருள்கள் வெண் மட்பாண்டங்களும் பீங்கான் சாமான்களுமாகும். சிமெந்தும் அதனுடன் தொடர்புள்ள பொருள்களும் கூட இத்தொகுதியில் சேர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வெண் மட்பாண்டங்களுக்கான பிரதான சந்தைகளாக அமெரிக்காவும், கனடாவும், பிரிட்டனும், மேற்கு ஜெர்மனியும், தென்னாபிரிக்காவும் ஆஸ்திரேலியாவும், நியூஸிலாந்தும் தொடர்ந்து இருந்து வருகின்றன. கூட்டுமுயற்சி ஒப்பந்தத்தின் கீழ் கிடைத்த சர்வதேச பிரசித்திவாய்ந்த ஒரு வியாபாரக் குறியின் உபயோகம், இலங்கை வெண் மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட பீங்கான் தரமேசைச் சாமான்களின் ஏற்றுமதிகளைப் பெருக்குவதில் மிக்க பயனுறுதி வாய்ந்ததாயிருந்துள்ளது. வெண் மட்பாண்டங்களையும் பீங்கான் சாமான்களையும் உற்பத்தி செய்வதில் இலங்கை ஒப்பியல் ரீதியாகப் பல அம்சங்களில் அனுகூலத்தை அனுபவிக்கிறது. களிமண் வகைகளும், சிலிக்காவும், படிகமும், களிக்கல்லும் மற்றும் கனிப்பொருள்களும் கிடைக்கின்றன. அத்துடன், பாரம்பரியமாக மட்கலங்களையும் வெண்மட்பாண்டங்களையும் வனைவதில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் ஒப்பியல் முறையில் குறைந்த செலவிலும் கிடைக்கின்றார்கள். ஆனால், உயர் தரச் சிறப்பு வாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் போதிய தொழில் நுட்ப உத்திகளும் சாதனங்களும் இல்லாதிருப்பதும், பயனுறுதிவாய்ந்த சந்தைப்படுத்தும் உபாயம் இல்லாதிருப்பதும் இதிலுள்ள குறைபாடுகளாகும். இத்துறையில் ஏற்றுமதியைப் பெருக்க அதிக வாய்ப்புள்ளது. ஆனால், உற்பத்தித்திறன் விரிவாக்கப்பட்டு, செம்மைப்படுத்தப்பட வேண்டியதவசியமாகும். அத்துடன், ஏற்றுமதியாளர்களுக்கு இப்பொழுதுள்ளதைவிட அனுகூலமான கேள்வு விகிதங்களை வழங்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இத்தொகுதிப்பொருள்களுக்கான செயல்திட்டம் சந்தைப்படுத்தும் முயற்சிகள் அதிகரிக்கப்படுவதை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். அமெரிக்காவிலும் கனடாவிலுமுள்ள முக்கியமான சந்தைகளில் அதிக பங்குபெறுவதற்கான முயற்சிகளின் தீவிரத்தை மிதமிஞ்சிய அளவுக்குத் தளர்த்த அனுமதிக்கக் கூடாது.

இப்பொழுதுள்ளதைவிட சிறந்த சந்தைப்படுத்தும் முயற்சிகளை அடிப்படையாகக் கொண்ட கீழ்க்கண்ட இலக்குகள் நியாயமானவையாகத் தோன்றுகின்றன.

## சிமெந்து

இன்று சிமெந்து ஏற்றுமதி பற்றிய புள்ளிவிவரங்கள் மாலைதீவுகளுக்கு மறு ஏற்றுமதி செய்வதை மட்டும் பிரதிபலிக்கின்றன. 1985 ம் ஆண்டளவில் மாத்திரமே ஏற்றுமதி செய்வது சாத்தியமாகலாம். அப்போது, காங்கேசன் துறையில் அமைக்கப்பட்டு வரும் புதிய சிமெந்து எந்திரத் தொகுதியின் பயனாக மொத்த உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 17 இலட்சம் 60 ஆயிரம் தொன்களாக அதிகரித்து, ஏற்றுமதி செய்வதற்கு ஒரு சிறு தொகை உபரி கிடைக்கும். புதிய இயந்திரத் தொகுதியைச் செயற்படுத்துவதில் முழு உற்பத்தித் திறனைச் சாதிக்க முடியுமாயின், 1985 ம் ஆண்டிலும், அத்துடன் 1986 ம் ஆண்டிலும் ஏறக்குறைய 30 கோடி தொன் உற்பத்தி இலக்கை அடைந்து, 1985 ம் ஆண்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு ஏறக்குறைய 2,25,000 தொன்கள் கிடைக்கும். மூலதனச் செலவில் வெளிநாட்டுக் கூறு 13 கோடி 50 இலட்சம் ரூபாவாக இருக்கக் கூடியதாக, 17 கோடி ரூபாவை முதலீடு செய்ய முடியுமென்று இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கின்றது.

## மற்றும் கனிப்பொருள்கள்

மைக்காவைத்தவிர மற்றும் கனிப்பொருள்களைப் பிரதானமாக அரசாங்கத் துறையே ஏற்றுமதி செய்கின்றது. மைக்கா தனியார் துறையினால் தோண்டியெடுக்கப்பட்டு, வரையறுத்த அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இத்தொகுதியில் இரத்தினக்கற்கள். காரீயம், கனிப்பொருள் மணல் ஆகியனவே அந்நியச் செலாவணி ஈட்டும் முக்கிய பொருள்களாகும். அத்துடன், காலத்துக்குக்காலம் இந்த வாய்ப்பும் இருந்து வருகிறது. பாறை - பொஸ்பேட் படிவுகளில் பீ 2 ம் 05 ம் நிறைய அடங்கியிருந்தபோதிலும், அவற்றைத் தரப்படுத்தாத கனிசதாதாக ஏற்றுமதி செய்ய முடியாது. ஹலோஜன் (உப்பாக்கி) அசுத்தங்களை அனுமதிக்கத்தக்க வரம்புகளுக்குள் குறைப்பதற்காக அவை தாது சுத்தி செய்யப்படவேண்டியிருக்கிறது. இதைவிட அதிக இலாபகரமான மாற்று வழி பாறை பொஸ்பேட்டை விசேஷ முறையொன்றின்படி பொஸ்பேட் உரமாக மாற்றியபின் ஏற்றுமதி செய்வதாகும். இத்தக் கனிப்பொருள் தொகுதியிலிருந்து ஏற்றுமதிகளின் கன அளவு சமீப வருடங்களில் தேக்க நிலையிலிருந்து. 1978 ம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட 67,000 தொன் மட்டத்திலிருந்து கூட வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. எனினும், ஏற்றுமதிகளின் பெறுமதி 1978 ம் ஆண்டிலிருந்த 9 கோடி 60 இலட்சம் ரூபாவிலிருந்து 1982 ம் ஆண்டில் 17 கோடி 40 இலட்சம் ரூபாவுக்கு இடையறாது அதிகரித்து வந்துள்ளது.

## காரீயம்

இலங்கையிலிருந்து கிடைக்கும் காரீயம், தூய்மையையும் பௌதிக பண்பையும் அளவுகோலாகக் கொண்டு பார்க்குமிடத்து, உலக உற்பத்தியில் 2 சதவிகிதமாக மட்டுமே அமைந்திருந்த போதிலும், தரத்தில் உலகிலுள்ள சிறந்தவற்றுள் ஒன்றாக இடம்பெறுகிறது. சேமிப்பிலுள்ள காரீயத்தின் மொத்தத் தொகை 1,00,000 தொன்களுக்கு மேலிருக்குமென மதிப்பிடப்படுகிறது. இதில் 61,000 தொன்கள் நிரூபிக்கப்பட்ட சேமிப்பாகும். 54,750 தொன் நிருபணமான சேமிப்புடனுள்ள போகல சுரங்கங்களே பிரதான ஆதாரமாக விளங்குகின்றன. அடுத்து கஹட்டகஹ - கொலங்கஹ சுரங்கங்களிலிருந்தும் ரங்கள சுரங்கங்களிலிருந்தும் காரீயம் தோண்டியெடுக்கப்படுகிறது. ரஜதாரவிலுள்ள படிவுகள் இன்னும் மதிப்பிடப்படவில்லை. அரசாங்க சுரங்க - கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் உண்மையான உற்பத்தி ஆண்டொன்றுக்கு 8,000 தொன்களுக்கும் 10,000 தொன்களுக்குமிடையேயிருந்துள்ளது. எமது காரீயத்துக்கு மிகமுக்கியமான சந்தைகள் ஜப்பானும் அடுத்து அமெரிக்காவுமாகும். மற்றும் சந்தைகள் பிரிட்டனும் அடுத்து ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் பாகிஸ்தானும் ஐரோப்பாவுமாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் புதிய முதலீட்டுத்திட்டமொன்றை அரசாங்க சுரங்க - கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் வகுத்துள்ளது. இத்திட்டம் அமுல் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கன அளவு/000 தொன்களில்/பெறுமதி கோடி ரூபா

| | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|
| கன அளவு | 11.3 | 13.3 | 13.3 | 14.3 | 15.0 |
| பெறுமதி | 13.4 | 15.7 | 15.7 | 17.1 | 18.0 |

யப்பட்டு, சந்தைப்படுத்தும் உபாயம் பேருக்கத்துடன் கைக்கொள்ளப்படின், கீழ்க்கண்ட ஏற்றுமதி இலக்குகளை அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கனிப்பொருள் மணல்

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கனிப்பொருள் மணலில் இல்மனைட், ரூட்டைல், ஸேர்க்கன் ஆகியனவும் சிறு அளவில் டொலோமைட்டும், குவாட்சம் (படிகம்), மொனேஸைட்டும் அடங்கும். தற்போது வருடாந்தம் 80,000 தொன் இல்மனைட்டும், 14,000 தொன் ரூட்டைலும், 8,300 தொன் ஸேர்க்கனும் உற்பத்தி செய்வதற்கான ஆற்றல் உண்டு எனினும், உற்பத்தி அதைவிட குறைவாகவே இருந்துள்ளது. ஆனால், 1981 ம் ஆண்டில் இல்மனைட் உற்பத்தி 80,000 தொன்களுக்குச் சற்றுக் கூடுதலாக இருந்தது. ரூட்டைல் உற்பத்தியும் முழு உற்பத்தி அளவை அடைந்துவிட்டது. ஆனால், உற்பத்தி செய்யப்பட்ட ஸேர்க்கனின் அளவு உற்பத்தித்திறனைவிட 50 சத விகிதம் குறைவாயிருந்துள்ளது.



காரீயம் ஏற்றுமதிக்கு தயார் செய்யப்படுகின்றது.

ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உலகெங்கும் ஏற்பட்ட வர்த்தக மந்தமே காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தக மந்தம் டைட்டேனியம் டயாக்ஸைட்டுக்கான கோரிக்கையைக் குறைத்துவிட்டது. உலோகங்களை உருக்கும் வார்ப்படச்சாலைகளிலும் வெப்பத் தடுப்புக்காரியங்களுக்கும் உபயோகிக்கப்படும் ஸேர்க்கனின் விலை 1981 ம் ஆண்டில் படிப்படியாக அதிகரித்தது. எனினும், இலங்கையின் ஏற்றுமதிகள் உலகவழங்கலில் ஒரு சிறு பின்னமாகும் - அதாவது இல்மனைட்டையும் ரூட்டைலையும் பொறுத்தவரை 2 சத விகிதமும், ஸேர்க்கனைப்பொறுத்த வரை 4 சத விகிதமுமாகும். ஏற்றுமதிகளை அதிகரிப்பதில் இருந்து வரும் பெரிய நிர்ப்பந்தக் கட்டுப்பாடு என்னவென்றால் மற்றும் வழங்குநர்களிடமிருந்து தோன்றும் கடும் போட்டியாகும். குறிப்பாக, பெரிய வழங்குநர்கள் டைட்டேனியம் உற்பத்தியாளர்களுடன் இடைத்தொடர்பு கொண்டுள்ளனர். இந்த நிர்ப்பந்தகட்டுப்பாட்டை வெல்ல, கனிப்பொருள்மணல் கூட்டுத்தாபனம் சந்தைத்தகவல்முறையொன்றை அபிவிருத்தி செய்வதவசியமாகும். டொலோமைட், படிகம், ஸிலிக்கா முதலியன போன்ற மற்றும் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக, கட்டுப்பாடுகளை அகற்றிவிட வேண்டும். அல்லது குறைத்து விட வேண்டும். கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் 11 கோடி 63 இலட்சம் ரூபா மூலதனச் செலவில் ஈர புவியீர்ப்பு உயர்படிவாக்க - வேருக்கற் பொறித்தொகுதியொன்றைப் பெற்றுள்ளது.

இது இல்மனைட் உற்பத்தித்திறனை ஆண்டொன்றுக்கு 1,30,000 தொன்னுக்கு அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அதிகரித்த உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்கு வலுமிக்க சந்தைப்படுத்தும் இயக்கமொன்று தேவைப்படும். டைட்டேனியம் களிம்பையும், செயற்கை ரூட்டைலையும், டைட்டேனியம் டயாக்ஸைட்டைக் கூட உற்பத்தி செய்வதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் கூட்டு முயற்சித் திட்டமொன்றை ஊக்குவிப்பதும் அவசியமாகும்.

## உப்பும் உப்புமூல இரசாயனப் பொருள்களும்

மனிதரின் நுகர்வுக்காகச் சூரிய உப்பை (98% என் எசி 1) உற்பத்தி செய்யும் ஒரு சில நாடுகளில் இலங்கையும் ஒன்று. தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் ஆண்டொன்றுக்கு 1,20,000 தொனிலிருந்து 1,50,000 தொன் வரையுள்ள உற்பத்தி மட்டத்தைப் பதிவு செய்துள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு 20,000 தொன்னிலிருந்து 30,000 தொன் வரையுள்ள உபரித்தொகை ஏற்றுமதிக்குக் கிடைக்கின்றது. தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் சுத்தி செய்த உப்பை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டு, அதைச் சேமிக்கும் முறையையும் கையாளும் முறையையும் அபிவிருத்தி செய்வதுடன் சந்தைப்படுத்தும் நுண்ணறிவையும் பெறுமாயின், ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. குளோரின், எரிசோடா, ஹைட்ரோக்குளோரிக் அமிலம் ஆகிய பொருள்களுக்கு நல்ல ஏற்றுமதி வாய்ப்புகள் இருந்து வருகின்றன. இப்பொருள்கள் சம்பந்தமான ஏற்றுமதி வாய்ப்புகள் பற்றியும் சுத்திசெய்த உப்பை உற்பத்தி செய்வது பற்றியும் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று சிபார்சு செய்யப்படுகிறது. உப்பு ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக, கொழும்பிலிருந்து கேள்வுக் கட்டணங்களும் கவனிக்கப்பட வேண்டும்.

1983 ம் ஆண்டிலிருந்து 1987 ம் ஆண்டுவரையுள்ள காலத்துக்குக் கீழ்க்கண்ட ஏற்றுமதி இலக்குகளை அமைக்கலாம்:

### ஏற்றுமதிகளின் பெறுமதி

| ஆண்டு | கோடி ரூபா |
|---|---|
| 1983 | 13.8 |
| 1984 | 15.2 |
| 1985 | 18.7 |
| 1986 | 18.5 |
| 1987 | 20.4 |

ஆதாரம்: தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித்திட்டம் - 1983 - 1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9 –ம் பக்கத் தொடர்ச்சி)

டாகும். இது வழக்கமாக பொட்டாஸியம், சோடியம், கல்சியம் அல்லது பேரியம் ஆகிய பொருள்களுடன் சேர்ந்திருக்கக் காணப்படுகிறது. மட்பாண்டக் கைத்தொழிலில், களிக்கல் பிணைக்கும் அல்லது மேல் பூச்சுப்பொருளாக உபயோகிக்கப்படுகிறது. கண்ணுடிக் கைத்தொழில் இக்கனிப் பொருளை உபயோகிக்கும் இன்னொரு முக்கியமான கைத்தொழிலாகும். எனமல் கைத்தொழில், தேய்ப்புப்பொருள் கைத்தொழில், தேய்த்துக்கழுவிச் சுத்தஞ் செய்யும் சவர்க்காரக் கைத்தொ தொழில் ஆகியவற்றிலும் களிக்கல் உபயோகிக்கப்படுகிறது. களிக்கல்லைச் சுரங்கங்களிலிருந்து பிரித்தெடுக்கும் தொழில் மாத்தளைப்பகுதியில் நடைபெறுகிறது. மிகப் பெரிய படிவுகள் கைக்காவலை எனுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் இதைப்பிரித்தெடுத்துப் பயன்படுத்துகிறது. கைக்காவலையில் 600 அடி ஆழம் வரை இருந்து வரும் இக்கனிப் பொருள் சேமிப்புகள் 30 இலட்சம் தொன் இருக்குமென மதிப்பிடப்படுகிறது. கூட்டுத்தாபனம் தலகொட, இரத்தோட்டைப் பகுதிகளிலும் பெருமளவிலான படிவுகளைச் சுரங்கங்களிருந்து பிரித்தெடுத்துள்ளது நசித்து, நுண்மையாக அரைத்த உருவில் களிக்கல்லை ஏற்றுமதி செய்யவாய்ப்பு உள்ளது.

இரத்தினக்கற்கள்

இலங்கை அதன் இரத்தினக் கற்களுக்கு பெரும் பிரசித்தி பெற்றுள்ளது. உலகத்திலே நவரத்தினங்களைக் கொண்ட மற்றும் நான்கு பிரதேசங்கள் தென்னுபிரிக்காவிலும், தென்னமெரிக்காவிலும், பர்மாவிலும், தாய்லாந்திலும் இருக்கின்றனவென்றும். ஒருவேளை பிரேஸிலைத்தவிர வேறெந்த நாடும் இலங்கையைப் போல இத்தனை வகை இரத்தினங்களை உற்பத்தி செய்யவில்லை. நாட்டின் பொருளாதாரம் நவரத்தினக் கைத்தொழிலால் பெருமளவுக்குப் பலமடைந்துள்ளது. சமீப வருடங்களில் நவரத்தினங்களின் ஏற்றுமதி நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணியாக வருடந்தோறும் சுமார் 50 கோடி ரூபாவைக் கொண்டு வந்துள்ளது. *1982 ம் ஆண்டில் இத்தொகை 69 கோடி 50 இலட்சம் ரூபாவையும், 1983 ம் ஆண்டில் 94 கோடி ரூபாவையும் அடைந்தது.* உல்லாசப்பயணிகளுக்கு விற்பதன் மூலம் சம்பாதிக்கப்பட்ட வருவாய் இத்தொகையில் சேர்க்கப்படவில்லை. நவரத்தினங்களில் சட்ட விரோதமான வியாபாரம் நடைபெற்றிராவிட்டால், உண்மையான பெறுமதி இதைவிட மிகவும் உயர்வானதாயிருக்கலாம்.

வைரம், ஒபல் (விமலகம், உபலம்), துருக்கோயிஸ் (பேரோசனை, ஆகாய நீலக்கல்), ஆகியவற்றைத் தவிர, எல்லா வகையான இரத்னக்கற்களும் இங்கு காணப்படுகின்றன. இலங்கையில் சர்வ சாதாரணமாகக் காணப்படும் இரத்தினக்கற்கள் - நீலம், மாணிக்கம், மரகதம், புஷ்பராகம், துவரமல்லி, செம்மணி (கார்னெட்), நுதிமல் (ஸ்பினல்), அரிகுணி (ஸெர்க்கன், கோமேதகம்) ஆகியனவாம். இந்நாட்டுக்கே அலாதியான இரத்தினக் கற்களில், சிங்கலைட் (இது ஒரு மக்னீஸியம் அலுமினியம் பொரேட்), தாஃபெயிட் (இது ஒரு மக்னீஸியம் பெரிலியம் அலுமினேட்), ஏகனைட் (இது உரேனியம், தோரியம், கல்சியம், இரும்பு ஈயம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு சிக்கலான ஸிலிக்கேட்) ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. இரத்தினக்கற்களுள்ள பகுதியெனச் சிறப்பாக அறியப்பட்ட பிரதேசம் சபரகமுவ மாகாணத்தில் உள்ளது. பிரதான இரத்தினச் சுரங்கங்களில் ஏறக்குறைய 80 சத விகிதம் இப்பகுதியிலேயே காணப்படுகின்றன. அவிஸாவெலைக்கும் கம்புறுபிட்டிக்கும், மொனருகலைக்கும் இடையே சுமார் 1,800 சதுர மைல் பரப்பைக் கொண்ட பகுதி இதில் அடங்கும். இரத்தினங்களுக்குப் பெயர் பெற்ற கிராமங்களில், பலாங்கொடை, எஹலியகொடை, பெல்மதுளை, இறக்குவானை, இரத்தினபுரி ஆகியன சிலவாகும். ஓக்கம்பிட்டி - எலஹெர பகுதிகளிலும், நுவரெலியா, ஹோர்ட்டன் – சமவெளி, மஸ்கெலியா, கண்டி ஆகிய பகுதிகளிலும் உள்ள மற்ற இடங்களிலும் சில இரத்தினக் கற்கள் கிடைக்கின்றன. ஏறக்குறைய 7,000 இரத்தினக் குழிகள் நாடெங்கும் சிதறிக் கிடக்கின்றன.


இரத்தினக்கற்களை விலையுயர்ந்த கற்கள் என்றும் ஓரளவு விலையுயர்ந்த கற்கள் என்றும் விரிவாக வகைப்படுத்தலாம். மரகதம் (கடல்வண்ணி), செம்மணி (கார்னெட்), துவரமல்லி, கோமேதகம் (ஸெர்க்கன்), புஷ்பராகம், படிகம், செவ்வந்தி, சந்திரகாந்தக்கல் ஆகியன ஓரளவு விலையுயர்ந்த கற்களின் வகையைச் சேரும்.

நீலநிறமாகவும், இளஞ்சிவப்பு நிறமாகவும், மஞ்சள் நிறமாகவும் உள்ள மணிகளும் உடு நீலக்கல்லும், மாணிக்கமும் உடு மாணிக்கமும் (கெம்பு) பசுந்தி (அலெக்ஸாந்திரைட்) யும் விலையுயர்ந்த கற்களாகும். வைடூரியக் கற்கள் தொழில் நுட்பரீதியாக ஓரளவு விலையுயர்ந்த மணிகளின் வகையிலேயே சேர்க்கப்படுகின்றன எனினும், அவை அருமையாகக் கிடைப்பதால், குறிப்பாக அவை குணச்சிறப்புடையனவாயிருக்கும்போது அவற்றின் விலைமதிப்பு வெகுவாக உயர்ந்து விடுகிறது. இரத்தினக்கற்கள் ஆற்றுப்படுக்கைகளில் உள்ள பாறக்கற்களின் படைகளிலும் மணலிலும் சதுப்பு நிலங்களிலும் உறுதியாக நிலை கொண்டிருக்கவும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் புதையுண்டிருக்கவும் காணப்படுகின்றன. சந்திரகாந்தக் கற்கள், துவரமல்லி, செம்மணிகள், செவ்வந்திக்கற்கள் ஆகியன இதற்கு விதிவிலக்கானவை. ஏனென்றால்,

(14 –ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையில் இரத்தினக்கற்கள் காணப்படும் பிரதேசங்கள்









பெரிய குழிகளில் சரளைக்கல் மணலை அரிப்பதில் பலர் ஈடுபடுத்தப்படுகின்றனர்.



சரளைக்கற்கள் கழுவப்பட்டு நீரில் அரிக்கப்பட்ட பின்னர் பெறுமதி வாய்ந்த கற்கள் தேடப்படுகின்றன.



சரளைக்கற்கள் நீரில் அமிழ்த்தப்படும் குழிகளுக்குப் பக்கத்தில் ஓலை மறைப்புக்கள் அமைக்கப்படுவது வழக்கம்.



நீண்ட பிடிகளைக் கொண்ட மண்வெட்டிகளின் உதவியால் ஆற்றுப்படுக்கைகளில் இரத்தினக்கல் மணல் தோண்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை பொதுவாக மழைவெயில் காற்றில் அடிபட்ட தாய்ப்பாறைகளைக் குடைந்து எடுக்கப்படுகின்றன. இரத்தினக்கற்கள் பருக்கைக் கற்களுடன் கலந்திருக்கும் பரப்பளவு பொதுவாக வேறுபடுகிறது. ஆனால், இது வழக்கமாக ஒரு சில மீட்டர் அகலமுள்ளதாகவும் ஏறக்குறைய 30 மீட்டர் ஆழமுள்ளதாகவும் இருந்துள்ளது. ஆழம் 15 மீட்டருக்கு மேலில்லாதபோது, ஏப்பியல் ரீதியாகப் படிவுகளைத் தோண்டியெடுப்பது சுலபமான காரியமாயிருக்கும். இரத்தினக் கற்கள் பொதிந்துள்ள பாறகற்கள் இதைவிட ஆழத்திலிருந்தால், குழியைச் சுற்றியுள்ள பாறகற்கள் இறுக்கமாகத் திரண்டிருக்காவாதலின் படிவுகளைத் தோண்டியெடுப்பது சிரமமாயிருக்கும். இந்நிலையில் விசேஷ ஆதரவு தேவைப்படும். குழியின் அடிப்பாகத்தில் சேரும் நீரை வெளியேற்ற தண்ணீர் பம்புகளை உபயோகிப்பது தான் இதற்குள்ள ஒரே வழி, இலேசாயுள்ள பாறகற்களிலிருந்து கனமான இரத்தினக்கற்களைப் பிரித்தெடுக்க, சாதாரணமாகக் கழுவும் முறை கையாளப்படுகிறது. இரத்தினக்கற்களை வெட்டவும் மினுக்கவும் (பட்டை தீட்டல்) பொறிமுறையில் இயங்கும் எந்திரங்கள் இருந்த போதிலும், இலங்கையின் இரத்தினங்களில் பெரும்பகுதியின் கல்லியல் வேலைகள் பழங்காலத்துக் கைப்பொறிகளைக் கொண்டே செய்யப்படுகின்றன.

இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்களுக்கு மிகத் தாராளமான சலுகைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், உத்தியோக பூர்வமான அடிப்படையில், இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினங்களின் பெறுமதி பல்லாண்டுகளாக ஏற்றத்தாழ்வாகவே இருந்து வந்துள்ளது. 1978 ம் ஆண்டில் உத்தியோக பூர்வமாக ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினங்களின் பெறுமதி 53 கோடி 10 இலட்சம் ரூபாவாக இருந்தது. இது 1981 ம் ஆண்டில் 30 கோடி 20 இலட்சம் ரூபாவுக்கு வீழ்ச்சியடைந்தது. சம்பாத்தியத்தில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சிக்கு, செறிவான முறையில் தோண்டியெடுக்கப்பட்டதன் விளைவாக இரத்தினம் விளையும் சில பகுதிகளில் வளம் காலியாகி விட்டமை ஒருகாரணமெனக் கூறப்பட்டது.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினங்களின் பெறுமதி

| ஆண்டு | பெறுமதி கோடி ரூபா |
|---|---|
| 1971 | .39 |
| 1972 | 1.25 |
| 1973 | 14.0 |
| 1974 | 10.8 |
| 1975 | 18.0 |
| 1976 | 26.1 |
| 1977 | 29.7 |
| 1978 | 53.1 |
| 1979 | 49.0 |
| 1980 | 45.8 |
| 1981 | 30.1 |
| 1982 | 68.4 |
| 1983 | 94.0 |


ஆதாரம்: இலங்கைச்சுங்கப்பகுதி

எனினும், சில இரத்தின வியாபாரிகள் சட்ட விரோதமான வழிகள் மூலம் தங்கள் இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்ததாகத் தோன்றுகிறது. நிதியமைச்சர் தமது 1984 ம் வருட வரவு செலவுத் திட்ட உரையின்போது இந்த அம்சத்தைச் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க மாணிக்கக்கல் கூட்டுத்தாபனம் இருந்து வருவதன் காரணமாக இரத்தினக் கைத்தொழிலில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டிருந்த போதிலும், மேலும் செம்மையாக்கப்பட வேண்டிய சில துறைகள் இருந்து வருகின்றன. உள்நாட்டு இரத்தின வியாபாரம் இன்னும் ஒருசில வர்த்தகர்களின் கைகளிலேயே இருந்துவருவதால், சுரங்க மறுப்போர் இலாபங்களில் ஒரு சிறு தொகை மட்டுமே பெறுகின்றனர். சட்ட விரோதமாக இரத்தினக்கற்களைத் தோண்டியெடுக்கும் நடவடிக்கைகள் இன்னும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. சுங்கப்பகுதி கூறுகிறபடி, இரத்தினக்கற்களைக் கள்ளத்தனமாகக் கடத்தும் செயல்களும் நின்றபாடாயில்லை. இரத்தினக்கல் சுரங்க அகழ்வும் கற்களைப் பதப்படுத்தலும் அத்துடன் கற்களை வெட்டி மெருகேற்றுதலும் நவீனமயமாக்கப்பட்டால், கைத்தொழிலுக்கு உதவியாயிருக்கும்.

## காரியம்

காரியம், அமைப்பில் அடுப்புக்கரியையும் வைரத்தையும் ஒத்திருக்கும் ஒரு படிக கார்பனுகும். கடந்த 160 ஆண்டுகளாகச் சுரங்கங்களிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டு, இலங்கையால் ஏற்றுமதி செய்யப்பட்டுவரும் முக்கிய








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிப்பொருள்களில் இதுவும் ஒன்றாகும். காரீயத்தில் மூன்று பிரதானவகைகள் உள்ளன முப்படல அமைப்புள்ள காரீயம், சிவல் காரீயம், உருவற்ற காரீயம். இலங்கைக் காரீயம், படல அமைப்புள்ள வகையைச் சேர்ந்தது. இதை மேலும் உப வகைப்படுத்தலாம் - படிக உருவிலுள்ள காரீயம்; உருவற்றதாகத் தோற்றமளிக்கும் காரீயம். இவ்விருவகைகளும் இந்நாட்டில் காணப்படுகின்றன. இலங்கைக் காரீயத்தில் கார்பன் (சுந்தக்கரி) அதிக அளவில் உண்டு; மீதி, சாம்பலும் நுண்மையான வன்மணல் துகளும் எளிதில் ஆவியாகும் சடப் பொருள்களுமாகும்.

19 ம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் 20 ம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் காரீயம் ஒருமுக்கியமான ஏற்றுமதிப்பொருளாக, கிட்டத்தட்ட தேயிலையையும் றப்பரையும் போன்று முக்கியமான ஒருபொருளாக விளங்கியது. உதாரணமாக, 1899 ம் ஆண்டில் காரீய ஏற்றுமதிகளிலிருந்து சம்பாதிக்கப்பட்ட வருமானம் 2 கோடி 20 இலட்சம் ரூபா. அதாவது, அவ்வருடத்தின் மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் 20 சதவிகிதமாயிருந்தது. 1983 ம் ஆண்டில் இக்கனிப்பொருள் இலங்கையின் ஏற்றுமதிப்பொருள்களின் வரிசையில் ஆறுவது இடத்தை வகித்தது. சுமார் 100 வருடங்கள் வரை காரீய உற்பத்தி தனியார் துறையின் கைகளிலேயே இருந்தது. 1971 ம் ஆண்டில் காரீயச் சுரங்கக் கைத்தொழில் அப்போதிருந்த அரசாங்க காரீயக் கூட்டுத்தாபனத்திடம் - 'அரசாங்க சுரங்கத் தொழில் - கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடமல்ல - கையளிக்கப்பட்டது. உற்பத்தி இன்று பிரதானமாக போகலையிலும் கஹட்டகஹ - கொலங்கஹாவிலும் பூமிக்கடியில் நடைபெறுகிறது. ரங்கலையில் இரு பரீட்சார்த்த சுரங்கங்கள் உள்ளன. அரசாங்க சுரங்கத் தொழில் - கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனமும் சியம்பலப்பிட்டி - புஸ்ஸஹேனேயில் மேலும் இரு கைவிடப்பட்ட சுரங்கங்களைத் திறந்து வைத்துள்ளது.

மற்றும் கைத்தொழில்களில் காரீயத்தின் முக்கியத்துவம், அதன் வெப்பமழிக்காத்தன்மையுடனும், விசேஷ குணங்களோடும், மின்சார இயல்புகளுடனும் சம்பந்தமுள்ளது. உலோகவியல் கைத்தொழில்களில் குறிப்பாக இரும்பையும் உருக்கையும் உற்பத்திசெய்வதில், வெப்பமழிக்காத - மொங்கானிடும் (தாக்கிஇறுக்கும்) ஒருபொருள் என்றமுறையில் காரீயம் மிகவும் பிரயோஜனப்படுகிறது. விலையுயர்ந்த உலோகங்கள் உட்பட உருக்கையும் இரும்பில்லாத உலோகங்களையும் வார்ப்படச் சாலைகளில் உருக்குவதில் காரீயத்திலிருந்து செய்யப்படும் புடக்குகைகள் (மூசை) உபயோகிக்கப்படுகின்றன. பென்சில்கள் செய்வதற்குக் களி மண்ணும் காரீயமும் சேர்ந்த ஒரு கலவை உபயோகிக்கப்படுகிறது. உலர் கல பட்டரிகளை உற்பத்தி செய்வதற்கு பங்கனீஸ் ஒட்சைட்டுடன் காரீயம் கலக்கப்படுகிறது. பொறிகளின் பாகங்களில் உராய்வை நீக்குவதற்கும், கார்பன் தூரிகைகளைச் செய்வதற்கும் காரீயம் விரிவான அளவில் உபயோகிக்கப்படுகிறது. உராய்வுப்பொருள்களால் செய்யப்படும், தடுப்புப் போர்வை (பிரேக் லைனிங்ஸ்)க்குள் பொதுவாகக் காரீயம் நிறைக்கப்படுவதற்குக் காரணம், தடுப்பு உராய்வினுல் உண்டாகும் வெப்பத்தின் இடமாற்றத்தைத் தணிப்பதாகும். அணுக்கருக் கைத்தொழிலில் மட்டாக்கிகளையும் தெறியி (பிரதிபலிக்கும்) குறிகளையும் உற்பத்தி செய்வதற்காகக் காரீயம் உபயோகிக்கப்படுகிறது.

இலங்கைக் காரீயத்துக்கு காரீயத்தை உற்பத்தி செய்யும் பலநாடுகளிடமிருந்து கடும் போட்டி இருந்து வருகிறது. இப்படிப் போட்டியிடும் பிரதான நாடுகள் கொரியா, ஆஸ்திரியா, ஜெர்மனி, சோவியத் ரஷ்யா, சீனு, மெக்ஸிகோ ஆகியனவாகும். மலகாஸி நாட்டிலிருந்தே மிகப்பெரிய பயமுறுத்தல் தோன்றியுள்ளது. அந்நாட்டில் காரீயப்படிவுகளிலிருந்து காரீயம் சுலபமாகப் பெறப்படுகிறது. கைத்தொழில் உலகில் ஏற்பட்ட வர்த்தக மந்தமும் காரீயச் சந்தையைப் பெருமளவு பாதித்தது. 1973 ம் ஆண்டுக்கும் 1981 ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சுமார் 10,000 தொன் காரீயம் உற்பத்தி செய்யப்பட்டது. 1980 ம் ஆண்டில் உலகப் பொருளாதார மந்தம் மோசமடைந்ததால் காரீய உற்பத்தி 7,300 தொன்னுக்கு வீழ்ச்சியடைந்துவிட்டது.


காரீய உற்பத்தியும் விற்பனைகளும்

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி (மெட்ரிக் தொன்கள்) | 10,579 | 9,491 | 7,124 | 7,453 | 8,257 | 5,528 |
| விற்பனைகள் - அளவு (மெட்ரிக் தொன்கள்) | 11,427 | 10,933 | 6,759 | 4,670 | 3,197 | |
| விற்பனைகள் - பெறுமதி (ரூ. பத்து இலட்சம்) | 67.7 | 89.5 | 94.0 | 114.8 | 73.8 | |
| ஏற்றுமதிகள் - பெறுமதி (ரூ. பத்து இலட்சம்) | 59.3 | 74.6 | 85.2 | 100.9 | 59.1 | |

ஆதாரம்: அரசாங்க சுரங்கத் தொழில் கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலைமை அவ்வாறிருப்பதால், இலங்கையில் காரிய உற்பத்தி நடைபெறுவது வெளிநாட்டுச் சந்தைகளைச் சார்ந்துள்ளது. 1983 ம் ஆண்டில் காரியக் கூட்டுத்தாபனம் பிரதானமாகச் சந்தைப்படுத்தல் சங்கடங்களின் காரணமாக அதன் உற்பத்தி வேகத்தைக் குறைக்க வேண்டியிருந்தது. ஒப்பியல் ரீதியாக, உற்பத்தி, விற்பனை இரண்டுமே குறைந்துவிட்டன.

1982 ம் ஆண்டு முடிவில், நாட்டின் காரியக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்றைத் தொடங்க அரசாங்கம் முடிவு செய்தது. அத்திட்டத்துக்கு 66 கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டத்தின் ஒரு பகுதிக்கு நிதிவழங்க ஒப்புக் கொண்டுள்ளது. செலவுகளின் உள்நாட்டுப் பங்கை (இது 26 கோடி ரூபாவுக்கும் 28 கோடி ரூபாவுக்கும் இடைப்பட்டதாயிருக்கும்) க் கவனத்திற் கொண்டு அரசாங்கம் இறுதி முடிவு செய்ததும் இத்திட்டம் தொடங்கும். இதற்கிடையில், அ. சு. க. அ. கூட்டுத்தாபனம் வெளிநாட்டுக் கூட்டுடன் இலங்கையில் காரியத்தை ஆதாரமாகக் கொண்ட கைத்தொழிலொன்றை ஸ்தாபிப்பது பற்றி ஆலோசித்து வருகிறது. இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் உள்நாட்டுச் சந்தைக்காகக் காரீயப் புடக்குகைகளை உற்பத்திசெய்வதற்காகத் தொழிற்சாலையொன்றை ஸ்தாபித்துள்ளது. அ. சு. க. அ. கூட்டுத்தாபனமும் முற்றாக ஏற்றுமதிச் சந்தைக்காக ஒரு வெளிநாட்டுக் கூட்டாளியுடன் உயர் தரமான காரீயப் புடக்குகைகளை உற்பத்திசெய்யும் நிலையம் ஒன்றை நிறுவுவதற்குத் திட்டமிட்டு வருகிறது.

## இரும்புத் தாது

இலங்கையிலுள்ள இரும்புத் தாதுப்படிவுகளை விரிவாக இரு வகையாகப் பிரிக்கலாம். அவற்றுள் ஒன்று நீர் சேர்ந்த இரும்பு ஒட்சைட் (லிமொனைட்டும் ஜியோதைட்டும்). மற்றது மக்னைட்ட். லிமொனைட் வகை பிரதானமாக இரத்தினபுரி மாவட்டத்திலும் குறைந்த அளவில் காலி மாவட்டத்திலும் மாத்தறை மாவட்டத்திலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



1982 — 1983 ம் ஆண்டுகளின்போது உருக்குக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி சகல இனங்கள் சம்பந்தமாகவும் வரவுசெலவுத்திட்டத்தில் குறிக்கப்பட்ட தொகைகளுக்குக் குறைவாகவே இருந்துள்ளது. முந்திய வருடங்களின் செயற்பாட்டுடன் ஒப்பிடுகையில், உற்பத்தி 1980 ம் ஆண்டில் உச்சநிலையை அடைந்தது. ஆனால், அதன் பின் உற்பத்தி படிப்படியாகக் குறைந்து வந்துள்ளது. பாதகமான சந்தை நிலைமைகளே இதற்குக் காரணம். பிரதானமாக இறக்குமதிகளிலிருந்து தோன்றிய அதிகரித்த போட்டியால் விற்பனைகள் குறைந்துள்ளன.

இந்தப் படிவுகளில் பெரும்பகுதி மேற்பரப்பிலோ அல்லது அதற்கு அருகிலோ காணப்படுகின்றன. தோண்டியெடுத்துப் பயன்படுத்தாத லிமொனைட் படிவுகள் 22 இலட்சம் தொன் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பனிரெந்தாவையிலும் சேருவிலையிலும் மக்னெடைட் படிவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பனிரெந்தாவையிலுள்ள படிவுகளில் ஏறக்குறைய 56 இலட்சம் தொன் நிறையுள்ள உயர் தர மக்னெடைட் அடங்கியிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மிகுந்த நம்பிக்கையூட்டும் இரும்புத் தாதுப் படிவு சேருவிலையில் காணப்படுகிறது. அதுவும் மக்னெடைட் படிவு தான். தரச் சிறப்பிலும் அளவிலும் இந்தப் படிவு வேறெந்த இரும்புத் தாதுப் படிவை விட மேலானதென எண்ணப்படுகிறது.


1961 ம் ஆண்டில் இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலையில் ஒரு சுழலும் ஆலை, ஒரு கம்பி ஆலை, வார்ப்படப் பிரிவு, விலாவுருக் கொண்ட உருக்கு உற்பத்தி நிலையம் ஆகியன அடங்கியுள்ளன.

இந்தத் தொழிற்சாலை தொடக்கப் பொருளுக்கு இறக்குமதி செய்யப்படும் துண்டங்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியிருக்கிறது. இந்நோக்கத்துக்காக ஆண்டு தோறும் ஏறக்குறைய 35,000 தொன் நிறையுள்ள உருக்குத்துண்டங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. 25 தொன் உற்பத்தித் திறனுள்ள மின்சாரவில் உருக்கும் உலை அமைக்கப்பட்டதுடன் 1982 ஜூலை மாதத்தில் திட்டத்தின் இரண்டாவது கட்டம் செயற்படத் தொடங்கியது. இந்த இரண்டாவது கட்டம் உள்நாட்டில் கிடைக்கும் உருக்குக் கழிவுகளையே முற்றிலும் நம்பியிருந்தது. இந்த உலை ஆண்டு தோறும் 60,000 தொன் நிறைவாக்கிய பொருள்களை உற்பத்தி செய்யும் ஆற்றல் வாய்ந்ததாயிருந்தது. உலையும் அதன் துணைக் கருவிகளும் 18 கோடி 30 இலட்சம் ரூபா பெறுமதியுடையவை யென மதிப்பிடப்பட்டுள்ளது. திட்டத்தின் இந்தக்கட்டம் பெருந் தொகையான வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிக்க வல்லதாயிருந்தது. எனெனில், அதற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் தேவைப்படவில்லை. ஆனல், இலங்கைப் புகையிரதப் பகுதியிலிருந்தும் சில உள்நாட்டுக் கைத்தொழில்களிலிருந்தும் பெறப்பட்ட கழிவுப் பொருள்களே தேவைப்பட்டன.



உலோகவியல் ரீதியாக இரண்டாவது கட்டம் வெற்றிபெற்ற போதிலும், 1983 ம் ஆண்டில் அதை மூடிவிட வேண்டியிருந்தது. ஏனென்ருல், அதன் உற்பத்திப்பொருள்களால் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுடன் போட்டியிடமுடியவில்லை. கஷ்டங்களிருந்த போதிலும், கூட்டுத்தாபனம் 1984 ம் ஆண்டு முற்பகுதியில் அவ்வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க முடிவுசெய்தது.

**சுண்ணக்கல்**

சுண்ணக்கல் ஒரு விலை மதிப்புள்ள மூலப்பொருளாகும். ஏனென்ருல், அது சிமெந்து, உரம், வெண்மட் பாண்டங்கள், சீனி, வெளிறச் செய்யும் தூள் (சலவைத்தூள்) போன்ற பல முக்கிய கைத்தொழில்களில் உபயோகிக்கப்படுகிறது. விவசாயத் துறையிலும் கட்டட நிர்மாணத் துறையிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்குத் தற்போதைய அரசாங்கம் பேரூக்கமளித்ததால், சுண்ணக்கல்லுக்கான கோரிக்கையில் செங்குத்தான அதிகரிப்பு ஏற்பட்டது. அரசாங்க வீடமைப்பு அபிவிருத்தி வேலைகளுக்கு மட்டும் ஆண்டு தோறும் குறைந்தபட்சம் 15,000 தொன் சுண்ணும்பு தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. சுண்ணக்கல் படிவுகள் மத்திய மலைகளிலும் வடபகுதியிலும் காணப்படுகின்றன. சுண்ணக்கல்லின் மூலங்கள் அபரிமிதமாகக் கிடைக்கக் கூடியன வாயுள்ளன.

எனினும், அவற்றைச் சுரங்கமறுத்துத் தோண்டியெடுப்பது கடினம். அத்துடன், அப்படியெடுத்தாலும் அசுத்தங்கள் அடங்கியுள்ளன. அதன் விளைவாக, முருகைச் சுண்ணத்துக்குக் கோரிக்கை அதிகமாயுள்ளது. முருகைச் சுண்ணத்தைச் சுரங்கமறுத்துத் தோண்டியெடுப்பது சுலபம். அத்துடன், ஒப்பியல் ரீதியாக அதிக தூய்மையாகவுமுள்ளது. முருகைக்கல் அகழ்வும் பதப்படுத்தலும் பொதுவாக அம்பலாங்கொடையிலிருந்து தெவுந்தறை முனைவரை 50 மைல் நீட்டுக்கு மட்டும் நடைபெறுகின்றன. முருகைக்கல் அகழ்வு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட மக்களுக்கு நல்ல வருமானத்தைத் தரும் அதேவேளையில் பலபிரச்சினைகளையும் சிருஷ்டித்துள்ளது. முருகைக் கற்பாரைச் சுற்றி அமைந்துள்ள ஓர் அலாதியான - பயனுள்ள சூழல் முறை அழிந்துவிடக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது. இதைவிட அதிக திகிலூட்டும் உண்மை என்னவென்ருல், முருகைக்கல் அகழ்வுகள் கடற்கரை அரிப்புக்கு அடிகோலுவதாகும். கடற்கரைகள் மீது கடலலைகள் தொடுக்கும் நேரடித் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் இயற்கைத் தடைகள் இந்த அகழ்வுகளால் கடற்கரைகளிலிருந்து அகற்றப்பட்டுவிடுகின்றன.

**சிமெந்து**

சமீப வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டங்கள் சிமெந்து உற்பத்திப் பெருக்கத்துக்கு அடிகோலியுள்ளன. கோரிக்கையைப் பூர்த்தி செய்வது, இலங்கை சிமந்துக் கூட்டுத்தாபனத்துக்குக் கஷ்டமாயுள்ளது. கூட்டுத்தாபனத்தின் முக்கிய சிமெந்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலைகள் காங்கேசன் துறையிலும் புத்தளத்திலும் அமைந்துள்ளன. கூட்டுத்தாபனம் காலியில் ஓர் அரைக்கும் தொழிற்சாலையையும் கொண்டுள்ளது. இத்தொழிற்சாலை காங்கேசன்துறையிலிருந்து பெறப்படும் சுண்ணக்கல்லை உபயோகிக்கின்றது. இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஆண்டுதோறும் ஏறக்குறைய 25 இலட்சம் தொன் சிமெந்தை உற்பத்திசெய்கின்றது. 1983 ம் ஆண்டில் லங்கா சிமெந்து லிமிட்டெட் என்னும் ஒரு பொதுக் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டது. இக்கம்பெனி ஆரம்பத்தில் ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் தொன் சிமெந்தை உற்பத்திசெய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் சிமெந்து உற்பத்தி (மெற்றிக் தொன்களில்)

| ஆண்டு | போர்ட்லண்ட் சிமெந்து | கட்டுவேலை சிமெந்து |
|---|---|---|
| 1977 | 3,62,860 | — |
| 1978 | 5,75,061 | |
| 1979 | 5,91,797 | 68,800 |
| 1980 | 5,51,076 | 71,723 |
| 1981 | 6,30,944 | 74,731 |
| 1982 | 4,68,840 | 68,789 |
| 1983 | 4,46,469 | 33,099 |

ஆதாரம்: இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்

சீனக்குடாவில் 40 கோடி ரூபா செலவில், ஒன்றோடொன்று தொடர்புள்ள சகல பகுதிகளையும் கொண்ட ஒரு முழு சிமெந்துக் கட்டுக்கோப்பை அமைக்க 1983 ம் ஆண்டில் உள்நாட்டுத் தனியார் கம்பெனியொன்று ஜப்பானியக் கம்பெனியுடன் கூட்டுச் சேர்ந்தது. அக்கட்டுக் கோப்பில் இத்திட்டத்துக்காக "கிளிங்கர்" (இசைக்கல்) இறக்குமதி செய்யப்படும். அச்சிமெந்துத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 2,00,000 தொன் சிமெந்தை உற்பத்தி செய்யும் ஆற்றலுள்ளது. 1984 செப்டம்பர் மாதத்திலிருந்து மாதமொன்றுக்கு 17,000 தொன்னிலிருந்து 20,000 தொன் வரை சிமெந்து உற்பத்தி செய்ய முடியுமென நம்புகிறது. காங்கேசன் துறையிலுள்ள சிமெந்துத் தொழிற்சாலையும் அதன் முழு உற்பத்தித் திறனுடன் உற்பத்தி செய்தால், ஏற்றுமதி செய்வதற்கு ஏறக்குறைய 2,25,000 தொன் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலைமையை முன்னிட்டு, நாடு சிமெந்தில் தன்னிறைவு அடைவதற்கும் கூடிய விரைவில் உபரியைக் கூட கொண்டிருப்பதற்கும் இயல் தகவுகள் (சாத்தியக் கூறுகள்) உண்டு. இந்த உபரித் தொகை வெளிநாட்டுச் செலாவணியை நாட்டுக்குக் கொண்டு வருவதற்காக ஏற்றுமதி செய்யப்பட வேண்டியிருக்கும்.

## மைக்கா

மைக்கா (அப்பிரகம், காக்கைப்பொன்) பொட்டாசியத்தையும் மக்னீசியத்தையும் இரும்பையும் சோடியத்தையும் மற்றும் பிறநேக மூலகங்களின் சுவடுகளையும் கொண்ட ஒரு சிக்கலான அலுமினியம் ஸிலிகேட் ஆகும். சர்வ சாதாரணமாகக் காணப்படும் வகைகளில் இரண்டு மஸ்கோவைட்டும் புளோகோபைட்டுமாகும். பல அங்குல விட்டமுள்ள பெரிய மெல்லிய சீவல்கள் சாதாரணமாகக் காணப்படுகின்றன. 0.5 மைக்ரோனை (மீட்டரில் பத்து இலட்சத்தில் ஒருபங்கு) ப் போல் அவ்வளவு சிறிதாயுள்ளதுகள்கள் களிக்கனிசத்துடன் சேர்ந்திருக்கக் காணப்படுகின்றன. கண்டென்ஸர்களை (வாயுக்களைத் திரவமாக்கும் உபகரணம் = ஒளிதொகுப்பான் = மின்தங்கி) ச் செய்வதில் மைக்கா மிகவும் பயன்படுகிறது. (மின்) காப்புப்பொருளாகவும் அதை உபயோகிக்கலாம். மைக்கா அரைத்த உருவில் சுவர்த்தாளை அலங்கரிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. மைக்கா படிவுகள் பதுளை, அப்புத்தளை மாவட்டங்களில் காணப்படுகின்றன. பூமியின் மேற்பரப்பிலுள்ள ஆழமற்ற குழிகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் மைக்காவின் பண்பு தாழ்ந்ததாயிருந்த போதிலும், நல்ல பண்புள்ள தகடு ஆழத்தில் கிடைப்பதாக நம்பப்படுகிறது. அ. சு. க. அ. கூட்டுத்தாபனம் மைக்கா வளத்தை ஆராய்ந்து வந்துள்ளது.

கூட்டுத்தாபனம் புழு அரித்த மைக்காவை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தது. 1982 ம் ஆண்டில் ஏறக்குறைய 300 தொன் மைக்கா ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

## கனிச மணல்

இல்மனைட், ரூட்டைல், மொனஸைட், ஸேர்க்கன் ஆகியன கூட்டாகக் கனிசமணல் வகைகள் எனப்பெயரிடப்பட்டுள்ளன. இல்மனைட் (எப் இ ஒ ரி ஐ 02) டில் டைட்டேனியம் ஒக்ஸைட் 50 சதவிகிதத்துக்கும் 60 சதவிகிதத்துக்கும் இடையே அடங்கியிருக்கிறது. ரூட்டைல் (ரி ஐ 02) கனிப்பொருளில் 95 சதவிகிதமாவது டைட்டேனியம் ஒக்சைட்டாக இருக்கிறது. உலோக டைட்டேனியம் வர்த்தக முறையில் உற்பத்திசெய்யப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் போது பல பிரயோகங்க ளுக்கான. குறிப்பாக விமானங் கள், விண்வெளிக்கலங்கள், ஏவு கணைகள், மீயொலி ஜெட் விமா னங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் அசாதாரண குணங் களைக் கொண்டுள்ளது. டைட் டேனியம் வர்ணப் பூச்சு (நிந்தை) களில் தூய டைட்டேனியம் ஒக் ஸைட் ஒரு கனிச மூலமாக அடங் கியிருக்கிறது. உயர்கதி உருக்கு வகைகளைச் செய்வதற்காக பேரோ கார்பன் டைட்டேனியம் உருக்குடன் கலக்கப்படுகிறது வெண்மட்பாண்ட (பிங்கான்) கைத்தொழிலும் ரூட்டைல் உப யோகிக்கப்படுகிறது. ஸெர்க்கன் (இஸட் ஆர் எஸ் ஐ O4) வார்ப் படச்சாலை மணலாகவும் வெப்ப மழிக்காப்பொருள்களின் உற் பத்தியிலும் உபயோகிக்கப்படு கிறது. புடக்குகைகளை உற்பத்தி செய்வதற்கான ஒரு மூலப்பொரு ளாகவும் அதை உபயோகிக்க லாம். பிரதானமாக, தோரியத் தையும் அரிய மண் மூலகங்களை யும் உற்பத்திசெய்வதற்காக மொனசைட் பயன்படுத்தப்படு கிறது. தோரியத்தின் செய்முறை முக்கியத்துவம் அணு சக்தியைப் பயன்படுத்துவதுடன் இணைந் துள்ளது.

இலங்கை அதன் கனிச மணல்களுக்காகச் சர்வதேச பிரசித்தி பெற்றுள்ளது. புல் மோட்டையிலுள்ள நாட்டின் கரைப்படிவுக அடையல், கடற் கரையோரமாக ஏறக்குறைய 4.5 மைல் தூரம்வரை பரந்து, தாழ்ந்த நீரடையாளத்துக்குக் கீழே சுமார் 250 யார் அகலத் தையும் சுமார் பத்தடி ஆழத்தை யும் அடைகின்றது. கனிசமணல் கள் செறிந்திருக்கும் மற்றும் முக்கிய இடங்கள் கொழும்புக்குத் தெற்கே உள்ள கைக்காவெலை யிலும் பொல்கொட்டுவையிலும், மன்னருக்குத் தெற்கே உள்ள குதிரைமலை முனையிலும் அமைந் துள்ளன. புல்மோட்டையிலுள்ள படிவுகளில் சுமார் 40 இலட்சம் தொன் மூலப்பொருள்கள் அடங் கியுள்ளதாக மதிப்பிடப்படுகி றது. இம் மூலப்பொருள்களில் 70 சத விகிதத்திலிருந்து 72 சத விகிதம் வரை இல்மனைட்டும், 8 சத விகிதத்திலிருந்து 10 சத விகிதம் வரை ஸெர்க்கனும், 8 சத விகிதம் ரூட்டைலும், 0.3 சத விகிதம் மொனசைட்டும், 1 சத விகிதம் ஸிலிமனைட்டுமாக அமைந்துள்ளன.

இலங்கையில் கனிச மணல் களை அகழ்ந்தெடுத்துப் பயன் படுத்துவதற்கு இலங்கைக் கனிச மணல் கூட்டுத்தாபனம் பொறுப் பாகும். புல்மோட்டையிலுள்ள தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 1,40,000 தொன் பண்படுத்தா உலர் மணலைப் பதப்படுத்தும் ஆற்றல் வாய்ந்ததாகும். காந்த வேருக்கி உபகரணங்களை உப யோகித்து இல்மனைட் மீட்கப்படு கிறது. 1978 ம் ஆண்டில் ரூட் டைலையும் ஸெர்க்கனையும் மீட் பதற்காக விரிவாக்கப்பட்ட தொழிற்சாலையொன்று செயற் படத் தொடங்கியது. தற்போது இல்மனைட்டின் உற்பத்தி விகிதம் ஆண்டொன்றுக்கு 40,000 தொன் களை உற்பத்திசெய்யும் கிரமத்தில் அமைந்துள்ளது. 1978 ம் ஆண் டில் புதிய தொழிற்சாலை இயங் கத் தொடங்கியதுடன், ரூட்டைல் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 11,300 தொன்களுக்கு அதிகரித் தது. ஆண்டொன்றுக்கு 10,000 தொன் ஸெர்க்கனை மீட்கும் ஆற் றல் கூட்டுத்தாபனத்துக்கு உண்டு. 1983 ம் ஆண்டில் இல்ம னைட், ஸெர்க்கன் ஆகியவற்றின் உற்பத்தி 1982 ம் வருட உற்பத் தியை விட குறிப்பிடத்தக்க அதிக ரிப்புகளைக் காட்டியது. தற்போது கூட்டுத்தாபனம் உற்பத்தி செய் யும் இல்மனைட், ரூட்டைல் முழுவ தும் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய் யப்படுகிறது. ஸெர்க்கன் ஐரோப் பாவுக்கும் ஜப்பானுக்கும் ஏற்று மதி செய்யப்படுகிறது. இல்ம னைட் ஏற்றுமதிகளின் பெறுமதி சமீபவருடங்களில் இடையறாது அதிகரித்துள்ளது. அதேவேளை யில், ரூட்டைல் ஏற்றுமதிகளின் பெறுமதி அதைவிட வேகமாக அதிகரித்துள்ளது.

இந்தக் கனிச மணல் வகை கள் பிரதானமாக வடகிழக்குக் கரையில் முல்லைத்தீவிலிருந்து நிலாவெளி வரையுள்ள படிவுகளி லிருந்தே அகழ்ந்தெடுக்கப்படு கின்றன. பூகர்ப்ப அளவைத் திணைக்களம் நடத்திய ஆய்வுகளி லிருந்து மேலதிகப் படிவுகள் இருப்பதாகத் தெரியவந்துள் ளது. தோண்டியெடுத்துப் பயன் படுத்தாத பாரக்கனிசங்களின் மொத்த நிறை சுமார் 1 கோடி 30 இலட்சம் தொன்களாக இருக் கிறதென்று இப்பொழுது மதிப் பிடப்படுகிறது.

செம்பு அடங்கிய மக்னடைட் படிவும் சேருவிலையில் கண்டு பிடிக் கப்பட்டுள்ளது. பூகர்ப்ப அள வைத்திணைக்களம் மினிரலி லுள்ள பூகர்ப்ப ஆராய்ச்சிப் பணியகத்தின் ஒத்துழைப்புடன் 1 சத விகிதத்திலிருந்து 1.5 சத விகிதம் வரை செம்பும் (சியூ) 40 சத விகிதம் இரும்பும் (எஃப் இ) அடங்கியுள்ள சுமார் 35 இலட் சம் தொன் நிறையுள்ள தாதுப் பொருள்களை இனங்கண்டுள்ளது.

அரசாங்க சுரங்கத்தொழில் கனிப்பொருள் அபிவிருத்திக் கூட் டுத்தாபனத்துக்கும் நெதர்லாந் தைச் சேர்ந்த இன்டர்ஸைட் பி. வி. என்னும் நிறுவனத்துக்கு மிடையிலான ஒரு கூட்டு ஒத்து ழைப்புத்திட்டத்தில் சிம்கோ லிமிட்டெட் கடற்கரையில் நடத் திய பரிசீலனையொன்று 1981 ம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட போது, பாரக்கனிசங்களின் பெரும் படிவுகள் இருப்பது சாத் தியமென்பது தெரிய வந்தது. இவற்றின் சரியான அளவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபிப்பதற்காக மேலும் ஒரு விவரமான பரிசீலனை நடத்துவதற்குக் கூட்டுத்தாபனம் உதவி பெறமுயன்றுவந்தது. மேலும் ஈர ஈர்ப்பு உயர்படிவாக்க தொழிற் சாலையொன்றையும் ஈரக் காந்தவேறுக்கல் தொழிற்சாலையொன்றையும் நிர்மாணிப்பதற்காக 1982 ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆஸ்திரியாவைச் சேர்ந்த மெஸர்ஸ் வொஸ்ட் அல்பைன் ஏஜி என்னும் நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இத்தொழிற்சாலைகள் 1984 ம் ஆண்டின் பிற்பகுதியில் செயற்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்பட்டது.

## ஸிலிக்கா மணல்

தேய்ப்புப் பொருள்களான படிகம், ஸிலிக்கா ஆகிய இரண்டும் இலங்கையில் அபரிமிதமாயுள்ளன. ஸிலிக்கா (எஸ் ஐ 02) வும் கண்ணாடி உற்பத்தி செய்ய உபயோகிக்கப்படுகிறது. ஸிலிக்காவின் மிக முக்கியமான படிவுகள் மாரவிலையிலும், பருத்தித் துறைக்கருகிலுள்ள அம்பனவள்ளி புரப்பகுதியில் காணப்படுகின்றன. நாத்தாண்டியில் இப்படிவுகள் சராசரியாக ஏறக்குறைய 4 அடி தடிப்புடன் 1,500 ஏக்கர் பரப்பில் பரந்துள்ளன. நாத்தாண்டியில் மட்டும் ஏறக்குறையே 60 இலட்சம் தொன் ஸிலிக்கா இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 98 சத விகிதம் ஸிலிக்காவும், 1 சத விகிதத்துக்குக் குறைவான இரும்பு ஒக்ஸைட்டும் டைட்டேனியம் டயாக்ஸைட்டும் அடங்கியுள்ளன. இது கண்ணாடி உற்பத்தி செய்வதற்கு ஒரு சிறந்த மூலப் பொருளாகும். றேயோ கிளாஸ் லிமிட்டெட் ஆண்டொன்றுக்கு 2,500 தொன் நிறையுள்ள உருகிய கண்ணாடியை உற்பத்தி செய்கின்றது. இதிலிருந்து வெள்ளை போத்தல்களும் அம்பர் போத்தல்களும் செய்யப்படுகின்றன. நாளொன்றுக்கு 30,000 போத்தல்களை உற்பத்தி செய்வதற்குரிய திட்டங்களைக் கம்பெனி வைத்திருக்கிறது. படிகத்துக்கும் ஸிலிக்காவுக்கும் தேய்க்கும் இயல்புகளிருப்பதால், அரத்தாள்களையும் மற்றும் தேய்ப்புப் பொருள்களையும் உற்பத்திசெய்ய அவை பயன்படுகின்றன. குருந்தம், செம்மணி (கார்னெட்) போன்ற உயர்தரமான இயற்கைத் தேய்ப்புப் பொருள்களும் இலங்கையில் இருக்கின்றன. நாட்டின் தென்கரையில் செம்மணி (கார்னெட்) மணல் நாட்டின் தென்கரையில் கிடைக்கின்றது.

## கடலிலிருந்து கனிப்பொருள்கள்

கடல் நீரில் பல்வேறு மூலகங்களும் சராசரியாக 3.5 சத விகிதம் கரைந்த நிலையில் உள்ளன. இவ்விதமாக, ஒவ்வொரு கனமைல் கடல் நீரில் ஏறக்குறைய 16 கோடி 60 இலட்சம் திடப்பொருள்கள் இருக்கின்றன. கனிப்பொருள்களைத்தரும் ஒரு மூலம் என்ற முறையில், கடல், அதன் உள்ளார்ந்த வளம் தொடர்பாகப் பயன்படுத்தப்படவில்லை. கடல் நீரில் கரைந்திருப்பதாகத் தெரியவரும் 60 சொச்ச மூலகங்களில் ஒரு சிலவே வர்த்தக முறையில் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. கடலிலிருந்து வெற்றிகரமாகப் பிரித்தெடுக்கக்கூடிய கனிசங்களில் உப்பு, ஜிப்ஸம் (உறைகளிக் கல் = சிலாசத்து), எப்ஸம் (பேதியுப்பு), புரோமீன், அயடீன் ஆகியனவும் அடங்கும். கடல் நீரில் தங்கம் போன்ற விலையுயர்ந்த உலோகங்களின் சுவடுகள் அடங்கியிருந்த போதிலும், இத்தகைய உலோகங்களைச் சிக்கனச் செலவில் மீட்கும் நடவடிக்கைகள் வெற்றிபெறவில்லை.

## உப்பு

உப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தனிஸ்தாபனமான தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் 17 ஞாயிற்று ஆவியாகும் உப்பளங்களைக் கொண்டுள்ளது. இவற்றின் கூட்டுமொத்த உற்பத்தித்திறன் ஆண்டொன்றுக்கு 2,50,000 தொன்களாகும். எனினும், உள்நாட்டுக் கோரிக்கை ஆண்டொன்றுக்கு 1,20,000 தொன்களுக்கு மேல் போகாததால், உற்பத்தி குறைந்த மட்டத்தில் வைக்கப்படுகிறது. கேள்வு விகிதங்கள் உயர்வாயிருப்பதால், உற்பத்தி செய்யப்படும் உப்பின் ஏற்றுமதி தடைப்படுகிறது. உப்பிலிருந்து ஆரம்பித்து உற்பத்தி செய்யக்கூடிய இரசாயனப்பொருள்கள் பல உள்ளன. எரி சோடா, சலவைச் சோடா, சலவைத்தூள், ஹைட்ரோகுளோரிக் அமிலம், வாயுக் குளோரீன் ஆகியனவே அவை. இலங்கையின் மொத்த உற்பத்தியில் 2 சத விகிதம் மட்டுமே இரசாயனப்பொருள்களை உற்பத்தி செய்வதற்கு உபயோகிக்கப்படுகிறது. இந்த இரசாயனப்பொருள்களைத் தற்போது பரந்தன் இரசாயனப் பொருள் கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்கின்றது. இக்கூட்டுத்தாபனம் இதற்காக எரி சோடாத் தொழிற்சாலையை நடத்துகின்றது. ஓர் இரண்டாவது எரி சோடா/குளோரீன் தொழிற்சாலையை அமைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. கடதாசிக் கைத்தொழிலில் ஒரு முக்கியமான மூலப்பொருளாயிருக்கும் எரி சோடாவுக்குப் பலத்தகோரிக்கை இருந்துவருகிறது. எம்பிலிப்பிட்டியாவில் ஆண்டொன்றுக்கு 700 தொன் எரி சோடா/குளோரீனை உற்பத்தி செய்வதற்காக, தேசியஉப்புக் கூட்டுத்தாபனம் பரந்தன் இரசாயனப்பொருள் கூட்டுத்தாபனத்துடனும் தேசியக்கடதாசிக் கூட்டுத்தாபனத்தோடும் 10 கோடி ரூபா செலவிலான திட்டமொன்றில் ஒத்துழைத்து வருகிறது. உதாவிதான கல உத்தியை உபயோகிக்கும் பரம்பரை முறையைப் போலன்றி

Appropriate Technology Services
121, POINT-PE.RO ROAD
NALLUR, JAFFNA
No.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திட்டம் மிக நவீனமான சவ்வுக்கல உற்பத்தித் தொழில் நுட்பவியலை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

கடல்நீரில் கிடைக்கும் கனிப்பொருள்கள்

அளவு: 1 கன மைல்

| கனிப்பொருள்கள் | அளவு |
|---|---|
| சோடியம் குளோரைட் | 12 கோடி 80 இலட்சம் தொன் |
| மக்னீஸியம் குளோரைட் | 1 கோடி 80 இலட்சம் தொன் |
| மக்னீஸியம் சல்பேட் | 80 இலட்சம் தொன் |
| கல்சியம் சல்பேட் | 60 இலட்சம் தொன் |
| பொட்டாசியம் சல்பேட் | 40 இலட்சம் தொன் |
| கல்சியம் கார்பனேட் | 578 ஆயிரம் தொன் |
| மக்னீஸியம் புரோமைட் | 350 ஆயிரம் தொன் |
| புரோமைன் | 300 ஆயிரம் தொன் |
| ஸ்ரொன்ஷியம் | 60 ஆயிரம் தொன் |
| போரன் | 21 ஆயிரம் தொன் |
| புளோரீன் | 6 ஆயிரம் தொன் |
| பேரியம் | 900 தொன் |
| அயடீன் | 700 தொன் |
| ஆர்சனிக் | 250 தொன் |
| ருபிடியம் | 200 தொன் |
| வெள்ளி | 40 தொன் |
| செம்பு, ஈயம், துத்தநாகம் | 30 தொன் |
| தங்கம் | 25 தொன் |
| உரேனியம் | 7 தொன் |

ஒரு நாட்டைத் துரிதமாகக் கைத்தொழில் மயமாக்குவதற்கு இரசாயனப்பொருள் கைத்தொழிலொன்றை அமைப்பது ஓர் அடிப்படைத் தேவையாகும். பரந்தன் இரசாயனப் பொருள் கூட்டுத்தாபனம் இதை அதன் குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டு, 1960 களின் ஆரம்பத்தில் குளோரீன், எரிசோடா, கந்தக அமிலம் ஆகியவற்றை வர்த்தக முறையில் உற்பத்தி செய்யத் தொடங்கியது. கூட்டுத்தாபனம் பிரதானமாக எரிசோடாவையும் திரவ குளோரீனையும் உற்பத்திசெய்து விற்பதில் நாட்டங்கொண்டிருந்த போதிலும், உள்நாட்டில் விற்பதற்காக மேசையுப்பும் வரையறுத்த அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஹைட்ரோ குளோரிக் அமிலம், பெரிக்குளோரைட், துத்தநாக குளோரைட் ஆகிய மற்றும் பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## முடிவுரை

குறை அபிவிருத்தியடைந்த இலங்கைப் பொருளாதாரத்தை அபிவிருத்தியுற்ற பொருளாதாரமாக உருமாற்றஞ் செய்வதற்குக் கைத்தொழில் துறை பிரதான பங்கெடுக்க வேண்டியிருக்கும், நிதியமைச்சர் தமது 1984 ம் வருட வரவுசெலவுத்திட்டப் பிரசங்கத்தில் சுட்டிக் காட்டியது போல, எங்களுடைய கனிச வளங்கள் பூரணமாகப் பயன்படுத்தப்படுவது அத்தியாவசியமாகும். சிறந்த பொருளாதாரத்தை ஆதரிக்கும் தற்போதைய அரசாங்கம் கைத்தொழிலில் தனியார் துறை ஈடுபடுவதற்கு ஊக்கமளித்து வருகிறது.

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் வெப்பமழிக்காப் பொருளுற்பத்தித் திட்டத்திலும், அரசாங்க சுரங்கத் தொழில் - கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், வன்கலக் கூட்டுத்தாபனம், இலங்கைக் கனிச மணல் கூட்டுத்தாபனம் உட்பட மற்றும் பல அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ஆரம்பித்துள்ள திட்டங்களிலும் தனியார் துறை பங்குபற்றுவதற்கு அரசாங்கம் அண்மையில் அதிகாரம் வழங்கியுள்ளது. தொழில் முயற்சியாளர்கள் கனிப்பொருள்களை ஆதாரமாகக் கொண்ட இது போன்ற கைத்தொழில்களில் சம்பந்தப்படும் சாத்தியக் கூறுகளைப் பற்றி ஆராய வேண்டியதவசியமாகும். உதாரணமாக, அரசாங்க சுரங்கத் தொழில் - கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடமிருந்து தொழில் நுட்ப ஆலோசனை பெற்று, கைவிடப்பட்ட பழைய காரீயச் சுரங்கங்களில் சிலவற்றைத் தனிப்பட்ட சுரங்க அகழ்வாளர்கள் திறப்பது சாத்தியமாகலாம். காரீயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை அமைப்பது பற்றியும் தனியார் துறை சிந்திக்க வேண்டும். இந்த கைய சாத்தியமான கைத்தொழில்களில், கார்பன் வில் மின்வாய்கள், உலர் கலங்களுக்கான மிகச்சிறிய மின்வாய்கள், கார்பன் தூரிகைகள், கூழ் காரீய உராய்வு நீக்கிகள், கொழுப்புப் பசைகள் (கிறீஸ்), வர்ணப் பூச்சுகள் (தீந்தை), புடக்குகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வன சிலவாகும். களிமண், கண்ணாடி — மணல், சுண்ணக்கல் போன்ற உள்நாட்டுக் கனிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட சிறு அளவிலான சுதேசக் கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்களை அமைப்பது ஒப்பியல் ரீதியாக மிகச் சுலபமாயிருக்கும்.

வெண் மட்பாண்டங்கள், கடதாசி, வர்ணப் பூச்சு ஆகிய கைத்தொழில்களில் ஓர் உபயோகமான மூலப் பொருளாயிருக்கும் கயோலின் (வெண்களி). சீனிக் கைத்தொழிலில் தூய்மைப்படுத்தும் கருவியாக உபயோகிக்கலாம். அத்துடன், மின்னணு (இலத்திரன்)ச் சாதனங்களுக்கான மின்னுழையப் பாகங்களைச் செய்வதற்கும் பயன்படுத்தலாம். கார்னட் (செம்மணி) மணலை அரத்தாள்களைச் செய்ய உபயோகிக்கலாம். தற்போது மைக்கா பதப்படுத்தாத நிலையில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மின்சார உபகரணங்களுக்கான காப்புப் பொருளாக உபயோகிப்பதற்காகத் தகடுகளை உற்பத்தி செய்ய மைக்காவைப் பதப்படுத்தலாம்.

கனிச மணல் கைத்தொழில், உயிர் பிழைத்திருப்பதற்கு அதன் ஏற்றுமதிகளையே பெருமளவுக்குச் சார்ந்திருக்கின்றது. இந்த மூல வளங்களை அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்குறிய சாத்தியக்கூறுகள் உள்ளன. இவ்விதமாக, பெறுமதி கூட்டிய கனிச உற்பத்திப்பொருள்கள் பல விதமான கைத்தொழில் சந்தைகளுக்குக் கிடைக்க முடியும்.

எப்பாவல பொஸ்பேட் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதும், பொஸ்பேட் உரம் உற்பத்தி செய்வதில் இலங்கை ஒரு முக்கிய நாடாக விளங்கும்; ஆண்டொன்றுக்கு 5,30,000 தொன் டைஅம்மோனியம் பொஸ்பேட்டையும், அத்துடன் ஆண்டொன்றுக்கு 50,000 தொன் மும்மை உயர் (சூப்பர்) பொஸ்பேட்டையும் இலங்கையால் உற்பத்தி செய்ய முடியும்.

கனிப்பொருள்களைப் பெறுவதற்குரிய ஒரு மூலம் என்ற முறையில் கடலின் உள்ளார்ந்த வளம் அளவிறந்ததாகும். உப்பு ஒரு புறமிருக்க, கடல் நீரிலிருந்து பிரித்தெடுக்கப்படக்கூடிய இரசாயனப் பொருள்களில், மக்னீஸியம் சல்பேட், மக்னீஸியம் குளோரைட், கல்சியம் சல்பேட், புரோமீன், அயடீன் ஆகியனவும் அடங்கும். இலங்கையின் கடலெல்லைகள் அதன் பரிமாணத்தைப் போல் நாலு மடங்குள்ள பரப்பை உள்ளடக்குகின்றன. ஆதலால், நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய கடல் சார் கனிப்பொருள்களுக்குக் கிட்டத்தட்ட வரையறையேயில்லை. எனவே கடலிலிருந்து கனிப்பொருள்களைப் பிரித்தெடுப்பதும், அவற்றிலிருந்து இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்வதும் இலாபகரமான வியாபாரமாயிருக்குமென்பதில் எத்தகைய சந்தேகமுமிருக்க முடியாது. உதாரணமாக, எரி சோடாவுக்கான கோரிக்கை ஆண்டு தோறும் சுமார் 12 சதவிகிதம் வளர்ந்து வருகிறது. கோரிக்கையில் ஏற்பட்டுள்ள இவ் வளர்ச்சிக்குப் பிரதானமாக மரக்கூழுக்கும் கடதாசிக்குமான அதிகரித்த கோரிக்கையே காரணமாகும். இவ்வருடம் இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் ஒரு கனடா கம்பெனியுடன் சேர்ந்து வெளிக்கரையில் (கரைக்கு அப்பால்) எண்ணெய் வள ஆராய்ச்சியைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இம் முயற்சி வெற்றி பெற்றால் தேசத்தின் பொருளாதாரத்தில் மிகப்பெரிய தாக்கம் ஏற்படும்.

தற்போது இலங்கையின் விலைமதிக்கத்தக்க கனிப்பொருள்களில் பெரும்பாலானவை கிட்டத்தட்ட கச்சா (பக்குவம் செய்யா) நிலையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கனிப்பொருள்களைப் பதப்படுத்தினால் அவற்றின் பெறுமதி பெருமளவுக்கு உயரும். சில கனிப்பொருள்களின் விஷயத்தில், இது இருபது மடங்கோ அல்லது அதற்கு மேலோ அதிகரிக்கலாம். எனவே, கனிப்பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு முன்பு அவற்றைப் பதப்படுத்துவது பற்றி இந்நாடு சிந்திக்க வேண்டிய தருணம் வந்து விட்டது.

உள்நாட்டுக் கனிப்பொருள்களின் உள்ளார்ந்த வளம் ஏன் பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. மூலதனத்தைப் பெற இயலாமை, கடந்த காலத்திலே தொழில் நுட்ப உத்திகள் கிடைக்காமை, தொழில் முயற்சியாளர்களிடம் போதிய துணிவு காணப்படாமை, பாதகமான சர்வதேச சூழ் நிலை ஆகியன அவற்றில் சில காரணங்களாயிருக்கலாம். அரசியல், சமூக நெருக்குதல்களும் பயனுறுதிவாய்ந்த கொள்கை சரிப் படுத்தப்படுவதைத் தடுத்திருக்கலாம். கனிப்பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களில் சிலவற்றிற்கான சர்வதேச சந்தையும் சமீப வருடங்களில் கஷ்ட காலத்தை எதிர்நோக்கியது. ஏனென்றால், சில கைத்தொழில் மயமான நாடுகளில் பொருளாதார வளர்ச்சி வேகம் குறைந்து விட்டது. உள்நாட்டு மூலதன பலத்தையும் தொழில் நுட்ப உத்திகளையும் ஏற்றுமதிச் சந்தைகளை அணுகும் வழிகளையும் நிறைவாக்குவதற்காக வெளிநாட்டு முதலீடுகள் செய்யப்பட வேண்டியதன் அவசியம் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சுரங்க அகழ்வுக் கம்பெனிகள் வளர்முக நாடுகளில் தங்களுடைய நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, கைத்தொழில் மயமான நாடுகளில் தங்களுடைய முதலீடுகளையும் மூலவள ஆராய்ச்சி முயற்சிகளையும் பலப்படுத்தும் சமீபத்திய போக்குக்கும் வளர் முகநாடுகளிலுள்ள கனிச வளங்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வாய்ப்புகளுக்கும் எத்தகைய சம்பந்தமுமில்லை. அது பெரும் பாலும் அரசியல், அரசிறை, பொருளாதாரக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தப் போக்கைத்தடுத்து நிறுத்த, பரஸ்பர நம்பிக்கையையும் உறுதிப்பாட்டையும் பலப் படுத்துவதும், வெளிநாட்டு மூலதனத்தையும் தொழில் நுட்ப நிபுணத்துவத்தையும் தொழில் நுட்ப உத்திகளையும் கொண்டுவரக் கூடிய முதலீட்டாளர்களையும் கவர்வதற்கான நிலைமைகளைச் சிருஷ்டிப்பதும் அவசியமாகும்.

இறக்குமதி செய்யப்படும் பொருள்களிலிருந்து வரும் போட்டியின் காரணமாக, இலங்கைக் கைத்தொழில்களில் சில சந்தைப் படுத்தும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றன. இந்நிலைமைக்கு ஒரு சிறந்த உதாரணம் இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத் திட்டத்தின் இரண்டாவது கட்டம் மூடப்பட்டுவிட்டதாகும். இங்கு 18 கோடி ரூபா பெறுமதியான ஒரு மின்சார வில் உலை சோம்பிக் கிடக்க விடப்பட்டது.

1982 ம் வருட மத்தியில் செயற்படுத்தப்பட்ட இரண்டாவது கட்டத்தினுல் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுடன் போட்டியிட முடியாததால், 1983 ம் வருடத்தில் அதை மூடிவிட வேண்டியிருந்தது. எனினும், 1984 ம் வருட ஆரம்பத்திலிருந்து இரண்டாவது கட்டம் மீண்டும் செயற்பட்டு வந்துள்ளது. பரிகாரா நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலன்றி மற்றப்படி அதன் எதிர்காலம் சூன்யவெளியாகவே இருக்கிறது. சுதேச மூலப்பொருள்களை உபயோகித்து, வேலை வாய்ப்புக்களை உண்டாக்கி, வெளிநாட்டு நாணயத்தைச் சேமிப்பதனுல் இத்தகைய திட்டங்களிலிருந்து ஏற்படும் அனுகூலங்களைக் கவனிக்குமிடத்து, உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதை அறிவதற்காகத் தற்போதுள்ள ஏற்றிறக்குமதித் தீர்வைக் கட்டுக் கோப்பு மீளாய்வுசெய்யப்பட வேண்டிய தவசியமாகும்.

இத்தகைய போட்டியை எதிர்நோக்க வேண்டியிருந்த இன்னேர் அரசாங்க முயற்சி பரந்தன் இரசாயனப்பொருள் கூட்டுத்தாபனமாகும். இது எரிசோடா, குளோரீன், ஹைட்ரோ குளோரிக் அமிலம், துத்தநாக ஒக்ஸைட், பெரிக் குளோரைட், மேசையுப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்கின்றது. நிறைவு செய்யப்பட்ட இறக்குமதிப் பொருட்களாலும் மாற்றுப் பொருட்களாலும் இக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியும் விற்பனையும் 1982 ம் ஆண்டில் பாதிக்கப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட எரிசோடா, குளோரீன் ஆகியவற்றின் விலைகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விலைகளைவிட மலிவாக இருந்தன. பலவாடிக்கையாளர்கள் இறக்குமதி செய்யப்பட்ட கந்தக அமிலத்தை உபயோகிக்கத் தொடங்கியதால், ஹைட்ரோ குளோரிக் அமிலத்தின் விற்பனைகள் பாதிக்கப்பட்டன.

உள்நாட்டில் கிடைக்கும் மூலப் பொருள்கள் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு உவப்பானவையாக இருந்தாலன்றி மற்றப்படி அவர்கள் பொதுவாக இறக்குமதி செய்யப்பட்ட உயர் தரமான மூலப்பொருள்களை உபயோகிக்கவே விரும்புகிறார்கள். உதாரணமாக, இலங்கையில் சீனக்களிமண் கிடைக்கின்ற போதிலும், அதன் தரம் கடதாசி, வர்ணப் பூச்சு போன்ற கைத்தொழில்கள் முற்ருக ஏற்கத்தக்கதாயில்லை. ஏனென்ருல், அது குறைவான பிரகாசம் உடையதாயிருக்கிறது. இரசாயன அல்லது மின் பகுப்பு முறை மூலம் உள் நாட்டுச் சீனக்களியின் பிரகாசத்தை அதிகரிப்பது சாத்தியமாயிருக்கலாம். பல கனிப் பொருள்கள் சம்பந்தமாக இதே போன்ற நிலைமை இருந்து வருகிறது. சில கைத்தொழில்களை இலாபகரமாக நடத்துவதற்கு உள்நாட்டுச் சந்தை போதுமானதாக இல்லாதிருக்கலாம். மாற்றுவழி, பார்வையைச் சர்வதேச சந்தைக்குத் திருப்புவதேயாகும். மற்றும் நாடுகளின் உற்பத்திப் பொருள்களுடன் போட்டியிடும் சக்தி பெறுவதெனில், நிறைவு செய்யப்பட்ட பொருள்களின் தரம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆதலால், உள்நாட்டு கனிச வளங்கள் சம்பந்தமான ஆராய்ச்சி – அபிவிருத்தி வேலைகளுக்கு ஊக்கமூட்டுவது மிக முக்கியமாகும். விஞ்ஞான ஆளணியினரும் ஆய்வுகூட வசதிகளும் இருக்கும் பல்கலைக்கழகங்களிலும் ஆராய்ச்சிக் கழகங்களிலும் தக்க ஆராய்ச்சித் திட்டங்களை நிறைவேற்றலாம். இத்தகைய வேலைகளால் இறுதியில் நன்மையடையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் எதிர்கால உற்பத்தியாளர்களும் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதிகளை வழங்கலாம்.

வர்த்தக சமூகமும் இதே போன்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டால், பொருளாதார முன்னேற்றத்தை மட்டுமன்றி முதலீடுகளின் மீதான இறுதிப் பிரதிபலனையும் உறுதிப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரிமை வழங்க வேண்டிய பிரச்சினைகள் — 1984

## உலக வங்கியின் கண்ணோட்டம்

ஏ. டப். கிளெவுசன்

கடந்த நாற்பது வருட காலத்தில் எதிர்நோக்கப்பட்ட மிக மிகப் பயங்கரமான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து, 1984 ஆரம்பத்தில் தான் உலகம் மீட்சி பெறத் தொடங்கி இருக்கிறது. ஏற்கனவே உண்டான பாதிப்பை எவ்வாறு சரி செய்யலாம் என்பது குறித்து உலகின் பிரபல பொருளியல் நிபுணர்களும் இப்போது தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள். உலக வங்கியின் தலைவரும், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவருமான திரு. ஏ. டபிள்யு. கிளெவுசன், 1984 ஜனவரியில் சுவிற்சர்லாந்தில் ஐரோப்பிய முகாமைத்துவ மன்றத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்சி அடைவது குறித்து உரையாற்றினார். அந்த மாநாட்டில் பல நாடுகளின் செல்வாக்கு நிறைந்த அரசாங்க அதிகாரிகளும், வர்த்தக அதிபர்களும் பங்குபற்றினர்கள். பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபடுவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய நான்கு முக்கிய பிரச்சினைகளை அவர் எடுத்துக் காட்டினர். கைத்தொழில் நாடுகளில் பொருளாதாரக் கொள்கைகளை விருத்தி செய்வதோடு பொருளாதாரச் செயற்பாட்டில் தேர்ச்சி அடைதல் என்பது முதல் இரண்டுமாகும். சர்வதேச முதலீட்டைப் புதுப்பித்தல், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளை விருத்தி செய்தல் ஆகியன அடுத்த இரண்டுமாகும். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் வர்த்தக முதலீட்டைப் புதுப்பித்துப் பெருக்குமாறும், மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளைப் பற்றி புரிந்து கொள்ளும் தன்மையை உருவாக்குமாறும் திரு கிளெவுசன் மாநாட்டுக்குச் சமுகமளித்திருந்த செல்வாக்கு நிறைந்த பிரமுகர்களிடம் கேட்டுக் கொண்டார்.

1984 ஆம் ஆண்டு தொடங்கியதும், கடந்த நாற்பது வருட காலத்தில் எதிர்நோக்கப்பட்ட மிகவும் பயங்கரமான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து உலகம் மீட்சி பெறத்தொடங்கி உள்ளது. எனினும், அந்த மீட்சி ஒருசீரான தாக இல்லை. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பலவும் இன்னமும் மிகவும் சிக்கலான - ஆபத்தான பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளன. சில நாடுகளைப் பொறுத்த மட்டில், அவற்றின் கடன் பெறுமானம் குறித்துச் சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கிறது: அதாவது வாங்கும் கடனை திரும்பச் செலுத்தும் பொருளாதார பலம் அந்த நாடுகளுக்கு உண்டா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. அபிவிருத்தி அடைந்து வரும் பல நாடுகளிலும் தனி நபர் (ஆள் ஒருவருக்கான) வருமானம் குறைந்து வருகிறது; தேவையான முதலீடுகள் ஒத்திவைக்கப் பட்டுள்ளன; வறுமையை ஒழிப்பதற்கான அல்லது குறைப்பதற்கான முயற்சிகள் தடைப்பட்டுள்ளன.

மூன்றும் உலக நாடுகளின் எதிர்காலச் சுபீட்சத்தைப் பாதிக்கும் விதத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளைச் சரி செய்வதற்கு இன்னும் பல வருடங்கள் செல்லும் என்பதை மிக ஆரம்பத்திலேயே இங்கு வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் கடந்த காலத்தில் எய்திய வளர்ச்சியை மீண்டும் அடைவதற்கு இப்போதைய மீட்சியின் பருமன் போதாது என்றே சொல்ல வேண்டும். முன்னர் எய்திய வளர்ச்சி விகிதங்களுடன் ஒப்பிடும் போது இந்த உண்மை புலப்படுகிறது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் முன்னேற்றத்துக்குப் புத்தூக்கம் அளிப்பதால், பல துறைகளிலும் பல வருடங்களுக்கு கடும் உழைப்பும் முயற்சியும் தேவை. அவ்வாறு செய்யத் தவறின் முழு உலகத்திற்குமே மிகப் பாதகமான விளைவுகள் உண்டாகும்.

மூன்றும் உலக நாடுகளின் மீது விசேஷ கவனம் செலுத்தி முழு உலகத்தினதும் பொருளாதார நிலை குறித்துப் பரந்த கண்ணோட்டத்துடன் விளக்குவதும், 1984 லும் அதற்குப் பின்னர் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களிலும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய நான்கு பொருளாதாரப் பிரச்சினைகள் மீது உங்கள் கவனத்தைத் திருப்புவதுமே எனது இன்றைய நோக்கமாகும். அந்த நான்கு பொருளாதாரப் பிரச்சினைகளும் வருமாறு; கைத்தொழில் நாடுகளில் பொருளாதாரக் கொள்கையை விருத்தி செய்வதோடு அதனைச் செயற்படுத்துவது; வர்த்தகத்தை தாராளமயமாக்குதல், சர்வதேச முதலீட்டுப் பரவலைப் புதுப்பித்தல்; அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரக் கொள்கையை திருத்தி அமைத்தல் என்பனவே அந்த நான்கு விஷயங்களும் ஆகும்.

## உலகப் பொருளாதாரம்

பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான இயக்கத்தின் மதிப்பீட்டின் பிரகாரம், கைத்தொழில் நாடுகள், ஒரு குழுவாக, 1984 இல் $3\frac{1}{2}$ சத வீதம் பொருளியில் வளர்ச்சியை அடையும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்த நாடுகளின் வளர்ச்சி 1983 இல் $2\frac{1}{4}$ சத வீதமாகவும், 1982 இல் கழிமானமாகவும் இருந்தமை குறிப்பிடற்பாலது. அமெரிக்காவின் திடுதிடுப்பான பொருளியல் மீட்சியே அந்த மாற்றத்திற்கு முக்கிய காரணமாகும். ஐரோப்பாவின் பொருளாதாரம் 1984 இல் மேலும் $1\frac{1}{2}$ சத வீதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் 1984 இல் 3 முதல் $3\frac{1}{2}$ சத வீதம் வரை சராசரி வளர்ச்சி காணும் என்பது எமது உலக வங்கியின் மதிப்பீடாகும். அவற்றின் சராசரி வளர்ச்சி 1983 இல் ஒரு சதவீதமாகவும், 1982 இல் இரண்டு சத வீதத்துக்குக் குறைவாகவும் இருந்தது. ஆனல் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சனப் பெருக்கம் வருடாந்தம் இரண்டு சத வீதத்துக்கும் கூடுதலாக வளர்ந்து வருகிறது. அதனல் அந்த நாடுகளின் தனி ஆள் வருமானம் 1982 இலும் 1983 இலும் வீழ்ச்சி கண்டன. 1984 இலும் மிகவும் மத்திமமான வளர்ச்சியையே காண முடியும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும், அவற்றில் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமான பொருளியல் நிலைகள் நிலவுகின்றன. உலகப் பொருளியல் வீழ்ச்சிக் காலத்திலுங்கூட, ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குப் புறம்பாக இந்தியாவும், சீனவும் மிக உயர்ந்த தனி ஆள் வருமான வளர்ச்சி வீதத்தை அடைந்திருந்தன. அதற்குக் காரணமும் உண்டு. ஆசியாவின் பேருருவங்களான அந்த இரண்டு நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தில் அளவுக்கு அதிகமான ஈடுபாடு காட்டுவதில்லை. ஆகையால் உலகப் பொருளாதாரம் விரிவடைந்த போதுங்கூட இந்தியாவும் சீனவும் ஏனைய நாடுகளைப் போன்று அதிக லாபம் பெறவில்லை. அதே பாங்கில் உலகின் அண்மைக் காலப் பொருளியல் குனறுபடிகளாள் அவை அதிகம் பாதிப்புறவும் இல்லை.

நமது பொருளாதாரத்துக்கு எண்ணெய் ஏற்றுமதியை நம்பியிருக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வருமானம் 1983 இல் பெரிதும் குறைந்தது. அபிவிருத்தி அடையும் நாடுகளைக் கூட்டாக அதாவது குழுவாகக் கருதிய போது, சராசரிப்பொருளியல் வளர்ச்சியில் பெரிய அளவில் வீழ்ச்சி தென்பட்டமைக்கு எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின். வருமானம் குறைந்ததே முழுக்காரணமும் ஆகும். 1984 இலும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் வருமானம் தொடர்ந்தும் சிறிதளவு குறைந்து கொண்டே இருக்கும் என நாம் எதிர்பார்க்கிறேம்.

மூன்றும் உலக நாடுகளின் கஷ்டங்களில் தலையங்கக் கவர்ச்சி தரும் கடன் பிரச்சினை முக்கியமானதாகும். லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கடன் பிரச்சினை மிகப் பெரிய அளவில் பாதித்துள்ளது. கடந்த மூன்று வருட காலமாக தனி ஆள் வருமானத்தில் 14 சத வீதம் இறக்கம் கண்ட போதிலும், எண்ணெய் இறக்குமதி செய்யும் லத்தீன் அமெரிக்க நாடுகள் 1984 இல் தனி ஆள் வருமானத்தில் சிறிதளவு வளர்ச்சியேனும் காணும் என்று நாம் எதிர்பார்க்கின்றேம்.

ஆபிரிக்காவைச் சேர்ந்த வருமானம் குறைந்த நாடுகளின் தனி ஆள் வருமானம் பத்து வருட காலமாக ஒரே தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டு வருகிறது; தனி நபர் உணவு உற்பத்தியோ கடந்த 20 வருடங்களாகக் குறைந்து வருகிறது. அதனல் உணவு இறக்குமதிக்குப் பெரும் பணம் செலவாகிறது. சரியாகச் சொல்வதானல் ஆபிரிக்காவுக்குக் கிடைக்கும் அபிவிருத்திக்கான உதவியில் நான்கில் ஒரு பங்கு உணவுப் பொருள் இறக்குமதிக்குச் செலவிடப்படுகிறது. வர்த்தகப் பொருள்களின் விலை இப்போது உயர்ந்து வருவதால், 1984 இல் ஆபிரிக்காவுக்கு சிறு நிவாரணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. அவ்வாறு இருப்பினுங் கூட தனி ஆள் வருமானத்தில் வளர்ச்சி உண்டாகும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

அநேகமான ஆபிரிக்க நாடுகளில் அரசியல் நிலைமைகள் அடிக்கடி மாறும் - நொறுங்கிப் போகும் - தன்மை உடையதாக உள்ளன. ஸ்தாபன நீதியான அமைப்புகளும் மனித வளங்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் ஏற்கனவே நலிந்து போய் விட்டன. ஆபிரிக்க நாடுகளில் இந்த நூற்றுண்டின் இறுதியில் சனப்பெருக்கம் இரண்டு மடங் கிற்கும் அதிகமாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனைய பிராந்தியங்களில் உள்ள சில அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் அநுகூலம் எதையும் எதிர்பார்ப்பதற்கு இல்லை. எனினும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள், இந்தத் தசாப்தத்தில், அறுபதுகளிலும் எழுபதுகளிலும் தரம் எய்திய பொருளாதார வளர்ச்சி விகிதங்களை மீண்டும் அடையலாம் என நாம் பெரும்பாலும் எதிர்பார்க்கின்றேம்.

அதே வேளை எமது மதிப்பீடு, எதிர்பார்ப்பு ஆகியவற்றை விட மிகவும் மாறுபாடான நிலைமைகளும் தோன்றக்கூடும். உலக நாடுகள் - கைத்தொழில் நாடுகளும், அபிவிருத்தி அடைந்த நாடுகளும், 1984 இலும் அதற்குப் பின்னரும் எம்மை எதிர் நோக்கும் கூரான பொருளியல் பிரச்சினைகளை நல்ல, மாதிரி - உரிய விதத்தில் அணுகிச் சமாளிக்கிறேமா அல்லது குறைந்த கவனத்துடன் தவருன வழியில் சமாளிக்க முயல்கிறேமா என்பதை பொறுத்தே பொருளாதார நிலைமைகள் உருவெடுக்கும்.

**கைத்தொழில் நாடுகளில் பொருளியற் செயற்பாடுகளை விருத்தி செய்தல்**

கைத்தொழில் நாடுகளைப் பொறுத்தவரை புதிய மாற்றி அமைக்கப்பட்ட - பொருளாதாரக் கொள்கைகளும், செயற்பாடுகளும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியவை ஆகும். தமது தற்போதைய பொருளியல் மீட்சி நீண்ட காலத்திற்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதாகவும், பணவீக்கத்தை உருவாக்கக் கூடிய வளர்ச்சியாக இல்லாமலும் அந்த நாடுகள் பார்த்துக் கொள்வது அவசியம்.

ஐக்கிய அமெரிக்காவில், இந்தப் புத்தாண்டில் பொருளாதார செயற்பாடுகள் வெகு துரித வேகத்துடன் ஆரம்பமாகி உள்ளன. அங்கு நிறைந்த வேலை வாய்ப்பும், வருமான அதிகரிப்பும் ஏற்பட்டால் கைத்தொழில் நாடுகளில் எல்லாம் பொருளியல் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப் பட்டதாக அமையும். பொருளாதார ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான ஸ்தாபனம் பணவீக்கம் சிறிதளவே உயரும் என்று எதிர்பார்க்கிறது. வேலையில்லாமை குறைவதாலும், உற்பத்தி உயர்வதாலும் பணவீக்கம் அதிகமாக இருக்காது என நம்பப்படுகிறது.

இன்றைய பொருளியல் மீட்சி அயராமலும், தளராமலும் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டுமானல், வரவு - செலவுத் துண்டு விழுதல்களைக் குறிப்பாக அமெரிக்காவின் துண்டு விழுதலை இயன்றவரை குறைத்துக் கொள்ளுதல் அவசியம், உண்மையான வட்டி விகிதங்கள் மிகவும் உயர்வாக இருக்கின்றன. அடுத்த சில வருடங்களில் அமெரிக்காவின் வருடாந்தத் துண்டு விழுதல் 20,000 கோடி டாலர்களாக இருக்கும் என உத்தேசிக்கப்படுகிறது. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் வட்டி விகிதங்கள் மென்மேலும் அதிர்க்க ஏதுவாகும். அது, வர்த்தக நம்பிக்கையை போக்கடித்து விடக் கூடும்.

வேறும் பொருளியல் மீட்சி நிலையிலிருந்து, உறுதியான, காத்திரமான பொருளாதார விஸ்தரிப்பு யுகம் ஒன்றை நோக்கிச் செயற்படுவது மிகவும் அவசியமாகும். அந்த இலக்கை நோக்கி முன்னேறுவதற்கு, உலகின் பொருளியல் அமைப்பில் பூரான மாற்றங்களைக் கொண்டுவரத்தக்க சூழலை உருவாக்குவதற்குக் கைத்தொழில் நாடுகளும் தூண்டுதலாக இருக்க வேண்டியது பிரதானம். பொருளாதார முன்னேற்றம் காண மாற்றங்கள் அவசியம். உதாரணமாக நவீன தொழில் நுட்பத்தின் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதே போன்று இயன்றவரை, ஒப்பு நோக்கப்படும் போது முன்னேற்ற கரமான நடை முறைகளுக்கு மாற்றவும் அல்லது அவற்றை அடியொற்றிச் செல்லவும் பழகிக் கொள்ளுதல் நன்று. சில துறைகளின் செயற்பாடுகள் வேகமாக விஸ்தரிக்கப்படக் கூடியவை. அதே போன்று மற்றும் சில துறைகளின் செயற்பாடுகள் திடீர் திடீரென சோர்ந்து விடக் கூடியன. கைத்தொழில் நாடுகளைப் பொறுத்தமட்டில் தழுவுதல் நடவடிக்கைகள் கடந்த பத்து வருட காலமாக மாற்றங்களுக்கு வழி செய்வதில் தோல்வி கண்டு விட்டன. குறிப்பாக உருக்குக் கைத்தொழில், புடைவைக் கைத்தொழில் போன்ற துறைகளில் தழுவல் நடவடிக்கைகளால் முதலீடுகளுக்கு ஏற்ற வருவாய் இன்றி வளர்ச்சி குன்றி விட்டது. உற்பத்தியை அதிகரிக்கவல்ல மாற்றங்களுக்கு வசதி செய்வதோடு அவற்றை அனுமதிக்கவும் வகை செய்யும் பொருளாதாரக் கொள்கைகள் கைத்தொழில் நாடுகளுக்கு அவசியம் தேவை. அப்போது தான் அந்த நாடுகளில் உறுதியான பொருளாதார வளர்ச்சியைக் காண இயலும்.

**சர்வதேச வர்த்தகத்தை தாராளமயமாக்குதல்**

ஆனல் ஒன்றை உணர்தல் அவசியம். அதாவது வெறும் உள்நாட்டு முன்னேற்றத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அபிவிருத்தியால் மட்டும் கைத்தொழில் நாடுகள் விரைவானதும் உறுதியானதுமான பொருளாதார வளர்ச்சியைக் கண்டுவிட முடியாது. உறுதியானதும் வேகமானதுமான பொருளியல் வளர்ச்சியைக் காண்பதற்கு சர்வதேச வர்த்தகத்தை மேலும் தாராளமாக்குவது மிக மிக அவசியமாகும். அதுவும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினையாகும். வர்த்தகத்தில் உள்ள தடைகளை நீக்க வேண்டும். கைத்தொழில் நாடுகளுக்கும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தடைகளை நீக்குவதும் மிக அவசியமாகும்.

கடைசிச் சந்ததிக் காலத்தில், ஜி. ஏ. ரி. ரி. ஸ்தாபனத்தின் கீழ் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் மூலம் வர்த்தகத் தடைகள் மெதுமெதுவாகக் குறைக்கப்பட்டன. வர்த்தகத் தடைகள் திறமையற்ற, நலிந்து போன கைத்தொழில்களைக் பாதுகாத்து வந்தன என்பன உண்மைதான் அதனால் அதிக உற்பத்தி மூலம் பொருளியல் வளர்ச்சியை ஊக்குவிக்கும் தாராள வர்த்தகம் இன்றியமையாதது ஆகிவிடுகிறது. அத்தோடு சர்வதேச வர்த்தகம் உற்பத்தியை விட சற்று வேகமாக வளரவும் முற்பட்டது அதனால் ஒவ்வொரு நாட்டினதும் தேசிய பொருளாதார வளர்ச்சியை உயர்த்தவும் உதவியது.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் தங்கள் ஏற்றுமதிப் பொருள்களில் சுமார் 60 சத வீதத்தை கைத்தொழில் நாடுகளுக்கு விற்கின்றன. எவ்வாறாயினும், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கும், கைத்தொழில் நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தைப் பொறுத்தமட்டில் கடந்த தசாப்தத்தின் தாராளமயமாக்கும் செயற்பாடுகள் குறைந்த அளவிலேயே வெற்றி கண்டுள்ளன.

இன்னொன்று என்னவென்றால்,அபி விருத்தி அடைந்து வரும் நாடுகள் பலவும், கைத்தொழில் நாடுகளைவிட மிகக் கூடிய அளவிலான - உயர்ந்த மட்டத்திலான பாதுகாப்புகளைக் கொண்டுள்ளன. கைத்தொழில் நாடுகள் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளிடம் இருந்து தாம் வாங்கும் பொருள்களுக்குப் பொதுவாக, சராசரிக் கட்டணங்களுக்குக் கூடுதலாகவே அறவிடுகின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பலவற்றுக்கும் முக்கியமானதாக விளங்கும் விவசாயம், தராளமயமாக்கும் செயற்பாடுகளில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அதுமட்டுமன்றி விவசாயத்துறை சார்ந்த வர்த்தகத்துக்கான கட்டுப்பாடுகள், தடைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அண்மைக் காலமாக கட்டணமில்லாத வேறு தடைகளும் பெருவாரியாக வந்திருக்கின்றன. "தானக" உதவும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் "ஒழுங்கு முறைச்" சந்தைப்படுத்தல் ஏற்பாடுகள் போன்றவை அவற்றில் அடங்கும்.

கைத்தொழில் நாடுகளைப் பொறுத்த மட்டில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுடன் வர்த்தகம் செய்யவேண்டியது மிகவும் அத்தியாவசியம் ஆகும். கைத்தொழில் நாடுகள் தமது மொத்த ஏற்றுமதியில் 28 சத வீதமான பொருள்களை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கே விற்பனை செய்கின்றன. அதன் மூலம் கைத்தொழில் நாடுகள் தமது தேசிய வருமானத்தில் 6 சத வீதத்தைப் பெற்றுக் கொள்கின்றன.

எனினும் அபிவிருத்தி அடையும் நாடுகளில் ஏற்பட்டு வரும் கடன் பிரச்சினையாலும் அதனோடு இணைந்த சிக்கனத் திட்டத்தாலும் கைத்தொழில் நாடுகளிடம் இருந்து பெறும் கொள்வனவு மிகக் குறைந்து விட்டது. 1982 நடுப்பகுதியில் ஆரம்பித்து நான்கு காலாண்டுகளை எடுத்துக் கொண்டால், முந்திய நான்கு காலாண்டுகளுடன் ஒப்பு நோக்கும் போது, 4,300 கோடி டாலர்களுக்கும் குறைந்த பெறுமானமுள்ள வர்த்தகமே நயந்திருக்கிறது. அதன் விளைவாகக் கைத்தொழில் நாடுகளைச் சேர்ந்த, விற்பனையை இழந்த நிறுவனங்களும், தொழிலாளர்களும் தமது செலவுகளைக் குறைத்துக் கொண்டனர். இந்தப் பல் விளைவுக் காரணி கைத்தொழில் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் பாதகமான பலனைக் கொடுத்தது. 1983 இல் கைத்தொழில் நாடுகள் 2½ சத வீத வளர்ச்சியை அடைந்தன. ஆனால் அபிவிருத்தியுறும் நாடுகள் 1982 ஆண்டில் கொள்வளவு செய்த அதே அளவு பொருள்களை 1983 இலும் வாங்கி இருப்பின் கைத்தொழில் நாடுகளின் வளர்ச்சி 3 சத வீதத்துக்கு உயர்ந்திருக்கும்.

கைத்தொழில் நாடுகளின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனைக் கிராக்கியை நிர்ணயிக்கும் சக்தி படைத்தவை என்பதனால் மட்டும் தான் அபிவிருத்தி அடையும் நாடுகளுடனை வர்த்தகம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதல்ல. இரு புறத்து நாடுகளும் வர்த்தகத் தொடர்புகளை வளர்த்துக் கொள்வதால் இரு சாரார்க்கும் வெவ்வேறு வகையிலான நன்மைகளும், உயர்ச்சிகளும் உண்டு. வளர்ச்சியுறும் நாடுகள் மென்மேலும் பாரம்பரியப் பொருள்களை உற்பத்தி செய்வதோடு, தொடர்ந்து வடக்கு - தெற்கு வர்த்தகம் விஸ்தரித்தால், உலகப் பொருளாதாரத்தின் விநியோகத் துறையில் பாரிய முன்னேற்றங்களைக் காண இயலும். சீர் செய்ய வல்ல உதவி வழங்கும் திட்டங்களை முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியளிக்கத் தக்கனவாக வகுப்பது வெகு சிரமமானதாகும். ஆனால் வருங்காலத்தில் கைத்தொழில் நாடுகளும், அபிவிருத்தியுறும் நாடுகளும் உயர்வான வாழ்க்கைத் தரங்களை அடைவதற்கு வடக்கு - தெற்கு வர்த்தகத்தை விஸ்தரித்து வலுப்படுத்துவது மிகவும் பிரதானமானது ஆகும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார மீள் வளர்ச்சிக்கும், கடன்-பெறு மதிப்புக்கும், கைத்தொழில் நாடுகளுக்கான ஏற்றுமதியை அதிக அளவில் உயர்த்திக் கொள்வது மிகவும் அத்தியாவசியமாகும். அறுபதுகளிலும், எழுபதுகளிலும் ஈட்டிய பொருளாதார வளர்ச்சிகளுடன் ஒப்புநோக்கும் போது, அபிவிருத்தி அடையும் நாடுகள் வருடம் ஒன்றுக்கு, 5 முதல் 6 சத வீதம் வரையான வளர்ச்சியை அடைவதற்கு இப்போதுள்ளதை விட 6 முதல் 7 சத வீதம் வரை தமது ஏற்றுமதியை விஸ்தரித்துப் பெருப்பிக்க வேண்டும். விளை பொருள்கள், எண்ணெய் ஆகியவற்றின் ஏற்றுமதியால் கிடைக்கும் வருமானத்தின் மூலம் பெறப்படும் மெதுவான வளர்ச்சி தொடரக் கூடிய வசதிகள் இருக்கும் என வைத்துக் கொண்டாலும், அபிவிருத்தியுறும் நாடுகள் தமது கைத்தொழில் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியை வருடம் ஒன்றுக்கு 12 சத வீதத்துக்கு ஆகுதல் உயர்த்திக் கொள்ளுதல் முக்கியமாகும்.

அபிவிருத்தியுறும் நாடுகள் பலவும் தமது உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளை மறுசீரமைப்பதன் மூலம் தங்கள் ஏற்றுமதியை அதிகரித்துக் கொள்ளலாம். வெளிவாரி சார்ந்த அபிவிருத்தி உபாயங்களைத் தொடர்ந்து கைக்கொண்ட நாடுகள், ஏற்றுமதியிலும், வருமானத்திலும் பொதுவாக மிக வேகமான வளர்ச்சியைக் கண்டுள்ளன. இந்த நாடுகள் உலகச் சந்தையில் காலடி வைத்ததால், தமது உள்நாட்டுச் சந்தையால் பெறமுடியாத கூடிய அளவு வளர்ச்சியைக் காண முடிந்தது. வெளிநாடுகளுக்குத் திசையிடப்பட்ட நாடுகளின் வர்த்தக அதிபர்களும், கொள்கை வகுப்பவர்களும் சந்தை மாற்றங்களை அனுசரித்து அவற்றுக்கு வளைந்து கொடுத்து சர்வதேசப் போட்டிக்கு ஏற்றாற் போல் செயற்படப் பழகிக் கொள்கிறார்கள். இவ்வாறாக, வெளிநாடுகளுக்குத் திசையிடப்பட்ட பொருளாதாரங்கள், சர்வதேச பொருளாதாரத்தில் உருவாகும் பாதகமான மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து நின்று பிடிக்கக் கூடியவை என்பதை நிரூபித்துள்ளன. ஏற்றுமதிக்குச் சார்பாகவோ அல்லது எதிராகவோ பாகுபாடு காட்டக் கூடாது என்று நாம் எல்லா நாடுகளிடமும் கேட்டு வருகிறோம். உற்பத்தியாளர்கள் தமது பொருள்களை உள்நாட்டில் விற்பதற்கும், அதே வேளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் ஊக்குவிப்புகள் வழங்கப்படும் நாடுகளில் மூலவளங்கள் திறமையாகவும் சரியாகவும் ஒதுக்கப் பட்டுள்ளன.

அபிவிருத்தியுறும் நாடுகளில் பெரும்பாலானவை, கடந்த அறுபதுகளிலும், எழுபதுகளிலும் தாராள வர்த்தகக் கொள்கைகளையே பெரிதும் நாடின. ஆனால் 1981 ஆம் ஆண்டளவில், சென்மதி நிலுவையைச் சமாளிப்பதற்காகப் பல நாடுகள் மேலதிக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்ததால் தாராள வர்த்தகப் போக்குத் தடைப்பட்டது. இப்போதைய உண்மை நிலை யாதெனில், நீண்ட கால வளர்ச்சிக்கு மேலும் அதிகளவு தாராள வர்த்தகம் பிரதானமாகும்; ஆனால் உலகின் பெரும்பாலான பகுதிகளில் பொருளியல் மீட்சி வேகம் மிகவும் குறைவாக இருப்பதால், பல நாடுகளால் (கைத்தொழில், அபிவிருத்தியுறும் நாடுகள் அடங்கும்) வர்த்தகத்திற்கு ஏற்படும் அதிக எண்ணிக்கையான தடைகளை எதிர்த்து நிற்க முடியவில்லை.

அதிக கடன் பளுவுடன் கஷ்டமுறும் நாடுகளுக்கு நிலைமை சிக்கலானதும், ஆபத்தானதும் ஆகும்; சில நாடுகள் தாம் ஏற்கனவே பெற்ற கடனுக்குரிய வட்டியைச் செலுத்துவதற்காக இன்னும் பல வருடங்களுக்கு வர்த்தக மிதமிகுதியை ஏற்படுத்தும் நிலையை உருவாக்க வேண்டும். இதே வேளை சம்பந்தப்பட்ட நாடுகளின் பொருளாதாரம் நலிவுறவும், ஏற்றுமதியானது ஊக்குவிப்பு எதுவும் இல்லாமல் குறைந்து போகவும் வழி செய்யக்கூடிய இறக்குமதிக் கட்டுப்பாடுகளை எதிர்வரும் காலத்தில் அமுல் செய்யத்தூண்டும் விதத்தில் அவற்றின் நிதிப் பிரச்சினைகள் வலுவடைந்துள்ளன.

### சர்வதேச மூலதனப் பரவல்

இந்த விடயம், சர்வதேச மூலதனப் பரவலில் இன்றைய போக்குகளை முற்றாக மாற்றி அமைக்கும் பிரச்சினைக்கு என்னைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் மொத்தக் கடன் 81,000 கோடி டாலர்களாகும். அதில் 10,000 கோடி டாலர் (நிதி) சம்பந்தமாகச், சுமார் 30 நாடுகள் நிபந்தனைகளை மாற்றி அமைப்பது சம்பந்தமாக மீள் - பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.

மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தியதன் பலனாகப் புதிதாக விதிக்கப்பட்ட நிபந்தனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகவும், நிலுவைகள், வட்டி விகிதங்கள் என்பன காரணமாகவும் கடன் சேவைக் கொடுப்பளவுகள் குறைந்தாக வேண்டும். எனினும் கடன் கொடுப்பளவுகள் அதிகரித்தே செல்கின்றன. இதே வேளை புதிய வர்த்தக வங்கியால் அபிவிருத்தி யுறும் நாடுகளுக்கு, குறிப்பாக பிரதான கடன் பெறுநர்களுக்கு வழங்கப்படும் கடன் வெகுவாகக் குறைந்து விட்டது. அதன் விளைவாக வர்த்தக வங்கிகளில் இருந்து அபிவிருத்தியுறும் நாடுகளுக்குப் போய்ச் சேரும் மொத்த மாற்று நிதி இப்போது சயமானம் என்றே சொல்ல வேண்டும். வங்கிகள் அபிவிருத்தியுறும் நாடுகளுக்குக் கொடுக்கும் கடனைவிட, அந்த நாடுகள் முன்னர் பெற்ற கடன் வகையால் அதிக பணத்தைத் திரும்பச் செலுத்துகின்றன.

உலக வங்கியின் கடன்படு தொடர்பு முறையின் தகவற்படி, 1981 இல் தனியார் துறையில் இருந்து நியாய - காலக் கடனுக வும், நீண்ட காலக் கடனுகவும் ஆக மொத்தம் 1,600 கோடி டாலர் அபிவிருத்தியுறும் நாடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனல் 1982 இல் மொத்தப் பண மாற்றம் 700 கோடி டாலர் சயமான நிதியாக இருந்தது. 1983 இல் அது 2,100 கோடி டாலர் சயமான நிதியாக இருக்கும் என்று நாம் மதிப்பிடுகின்றோம்.

உற்பத்தித்துறையில் இடப்படும் மூலதனம் எப்போதும் நிதி ரீதியாக ஒரு நல்விளைவைத் தர வேண்டும். வெளிநாட்டு முதலீட்டுக்காரர் தாம் மூலதன மிட்டதை விடக் கூடுதலாகப் பெற வேண்டும். ஆனல், உயர்ந்த வருமானம் உள்ள நாடுகளுக்கு, மூல வளங்களைக் கைமாற்றும் பணியைச் செய்வதற்கு அபிவிருத்தியுறும் நாடுகள் ஒரு குழுவாக இன்னமும் முதிர்ச்சி அடையவில்லை என்றே கொள்ள வேண்டும். 1983 ஆம் ஆண்டில், வளர்ச்சி அடையும் நாடுகளைச் சேர்ந்த 13 பிரதான கடன் படுநர்களிடமிருந்து தனியார் கடன் வழங்குநர்களுக்கு கைமாற்றப்பட்ட நிதி அவற்றின் தேசிய வருமானத்தில் 2 சத வீதத்துக்குச் சமமானது ஆகும்.

வேறு வகைகளைச் சார்ந்த நியாயமான கால, நீண்ட கால மூலதனப் பரவல் வர்த்தக வங்கிகளில் இருந்து கிடைக்கக் கூடிய நியாயமான கால, நீண்ட காலக் கடன்களாகக் கிடைக்கும் நிதியில் ஏற்படும் வீழ்ச்சியை ஈடு செய்வதாக இல்லை.

வர்த்தக வங்கியின் கடன் வழங்களில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டதால், அபிவிருத்தியுறும் நாடுகளில் பெரும்பாலானவை, பல்நாட்டு நிறுவனங்களைத் தமது தேசங்களில் நேரடியாக முதலீடு செய்விப்பதில் அதிக முயற்சியை மேற்கொள்கின்றன. அவ்வாறு இருந்த போதிலும் நேரடி முதலீடு வருடாந்தம் குறைந்து வருவதைக் காண முடிகிறது. 1981 ஆம் ஆண்டில் 1,400 கோடி டாலராக இருந்த நேரடி முதலீடு 1982 இல் 1,300 கோடி டாலராகவும் 1983 இல் 1,000 கோடி டாலராகவும் குறைந்தது.

உத்தியோகபூர்வ ஸ்தாபனங்களில் இருந்து கிடைக்கும் பிரதான மூலதன வகைகளான நியாய கால மூலதனம், நீண்ட கால மூலதனம் ஆகிய இரண்டும் சலுகைகள் குறைந்த கடன் வழங்கல்களாகும்; அத்தோடு அபிவிருத்திக்கான உதவியாகக் கிடைப்பனவும் ஆகும்.

சலுகைகள் குறைந்தளவான முன் சொன்ன கடன் வழங்கல்கள் இரண்டும் உலக வங்கி, ஏனைய பல நோக்கு வங்கிகள், ஏற்றுமதிக் கடன் முகவர் நிலையங்கள் ஆகியவற்றினுல் வழங்கப்படுகின்றன. சர்வதேச நாணய சபையின் மூலவளங்கள், இத்தகைய உத்தியோகபூர்வ கடன் வழங்கல்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இதே வேளை அபிவிருத்திக்காக வழங்கப்படும் உதவி மூலதனங்களில் நன்கொடைகளும், சலுகைகள் நிறைந்த கடன்களும் அடங்குவது உண்டு. ஐ டி ஏ எனப்படும் சர்வதேச அபிவிருத்திக் கழகம், உலக வங்கியுடன் இணைந்த நிறுவனமாகும்.

வர்த்தக முதலீட்டாளர்களுக்குக் கஷ்டம் கொடுக்கும் ஆபத்தான விஷயங்களை உத்தியோக பூர்வக் கடன்களும், அபிவிருத்திக்கான உதவிகளும் பெருமளவில் குறைந்துக் கொள்ளும். எனினும் உத்தியோகபூர்வ வளங்களில் இருந்து, 1981 ஆம் ஆண்டுக்கும் 1983 ஆம் ஆண்டுக்கும் இடையில் வழங்கப்பட்ட நியாய - கால, நீண்டகாலக் கடன் வழங்கல்கள் மூலம் பெறப்பட்ட நிகர நிதி மாற்றம் ஏறக்குறைய ஒன்ருகவே இருந்தது. உதாரணமாக, அபிவிருத்தியுறும் நாடுகள் முதலீட்டுக்கும், வளர்ச்சிக்கும் தூண்டுதல் அளிக்கும் பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்ட பின்னணியை உருவாக்க உற்சாகப்படுத்தும் விதத்தில் உலக வங்கி அவற்றுக்கு உதவிகளை வழங்கி வருகிறது. அத்தோடு, நன்ருகத் தயாரிக்கப்பட்ட பயன்தரக் கூடிய திட்டங்களுக்கும் உலக வங்கி தாராளமாக உதவி செய்து வருகிறது. அத்தகைய திட்டங்களுக்கு வர்த்தக வங்கிகளும் நிதி உதவி வழங்குவதற்குரிய வாய்ப்புகளையும் நாம் விஸ்தரித்து வருகிறோம்.

அபிவிருத்தியுறும் நாடுகளுக்குத் தொடர்ந்தும் நியாய - கால, நீண்ட கால நிதிகள் தேவைப்படும் சூழ்நிலை நிலவுவதாலும், ஏனைய மூலதனப் பரவல் விஸ்தரிக்கப்படும் போக்குகள் காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதாலும், உலக வங்கி, பிராந்திய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் கடன் வழங்கல்கள் உயர்ந்து செல்ல வேண்டியது அவசியம். உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் வர்த்தக ரீதியில் கடன் படுவதன் மூலம் தமது வழங்கலைப் பெருக்கிக் கொள்கிறார்கள். உத்தியோகபூர்வக் கடன் வழங்குநர்கள் தமது அலுவல்களை விஸ்தரிப்பதற்கு அந்தந்த நாட்டு அரசாங்கங்களின் மூலதனம் அவசியம்.

மிகக் குறைந்த வருமானமுடைய அபிவிருத்தியுறும் நாடுகள், அதாவது நாள் ஒன்றுக்கு தனி ஆள் ஒருவருக்கு ஒரு டாலருக்கும் குறைந்த வருமானம் உடைய நாடுகள், தாம் பெறும் வெளி மூலதனத்தில் முக்கால் பங்கிற்கு, உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி நிதியையே முழுக்க முழுக்க நம்பி இருக்கின்றன. எனினும், இப்போது கைத்தொழில் வள நாடுகளிடம் இருந்தும், அதிக வருமானம் உள்ள எண்ணெய் ஏற்றுமதி நாடுகளிடம் இருந்தும் கிடைக்கும் மொத்த அபிவிருத்தி நிதி உதவி உயர்ச்சி, வீழ்ச்சி இன்று ஒரே மட்டத்தில் தேக்க நிலையிலேயே உள்ளது. அதே வேளை முகவர் நிலையங்களிடம் இருந்து கிடைக்கும் அபிவிருத்தி உதவி நிதியில் 70 சதவீதம் மத்திய நிலை வருமானமுள்ள அபிவிருத்தியுறும் நாடுகளுக்கே போய்ச் சேர்கிறது. குறைந்த வருமானமுள்ள அபிவிருத்தியுறும் நாடுகளுக்கு மிகக் குறைவாகவே கிடைக்கிறது.

சர்வதேச அபிவிருத்திக் கழகத்துக்குப் பணம் வழங்கும் நாடுகள், எதிர்வரும் பல வருடங்களுக்கு தாம் எந்தளவுக்கு நிதி உதவி செய்ய முடியும் என்பது குறித்து அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தி முடித்துள்ளன. சர்வதேச அபிவிருத்திக் கழகத்தின் ஆகப் பிந்திய நிரவல் தொகையாக மூன்று வருடங்களுக்கு 900 கோடி டாலர்களை வழங்க அவை இணக்கம் கண்டுள்ளன. இந்தத் தொகை 1979 இல் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையை விட மிக மிகக் குறைவான தாகும். ஐ. டி. ஏக்கு உதவும் நாடுகளின் இந்த ஏமாற்றத்தைத் தரும் முடிவு, வரும் ஆண்டுகளில் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி தொடர்ந்தும் பெரும் தேக்க நிலையில், அல்லது பெரும்பாலும் பெருமளவு வீழ்ச்சி காணக்கூடிய நிலையிலேயே இருக்கும் என்பதை முன்னியம்புகின்றது.

இந்த முடிவு குறித்து நாம் திருப்தி கொள்ளமுடியாது. உலகில் உள்ள வருமானம் மிகக் குறைந்த நாடுகளுக்கு, குறிப்பாக உப-சஹாரா ஆபிரிக்க நாடுகளுக்கு, உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி, அதற்கான பயன்தரு திட்டங்கள் அத்தியாவசியம் ஆகும். ஆகையால், ஐ. டி. ஏக்கு வழங்கும் நிதியை மேலும் அதிகரிக்குமாறு நாம் தொடர்ந்து அரசாங்கங்களிடம் கேட்ட வண்ணமே இருப்போம். ஐ. டி. ஏயை பலப்படுத்துவது மிகவும் கஷ்டமான காரியம் தான்; எனினும் அது அத்தியாவசியமானது ஆகும்.

வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கலிலும் நேரடி முதலீட்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியோடு, உத்தியோகபூர்வக் கடன் வழங்கல் அபிவிருத்தி உதவி நிதி ஆகியவற்றின் வளர்ச்சிக் குறைவும் சேர்ந்ததால், அபிவிருத்தியுறும் நாடுகள் இறக்குமதியை வெட்டிக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அவை, குறுகிய கால வர்த்தகக் கடன்களைப் பெற்றும், விசேஷ ஒதுக்கு நிதியங்களிலிருந்து பணத்தைப் பெற்றும் (சர்வதேச நாணய சபை வழங்கிய வளங்கள், சில உட்பட) 1982 இல் இறக்குமதி வெட்டை சுமாரான மட்டத்தில் வைத்திருந்தன. ஆனால் 1983 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியுறும் நாடுகளில் பலவும் தங்கள் விசேஷ ஒதுக்கு நிதியங்களை வற்றச் செய்தன. குறுகிய காலக் கடன் பெறும் வாய்ப்புகளும் அருகிப் போயின. எனவே 1983 இல் இறக்குமதிகளை மிகப்பெரிய அளவிலான வெட்டுவதற்கு அவை நிர்ப்பந்திக்கப்பட்டன. அபிவிருத்தியுறும் நாடுகளின் நடைமுறைத் துண்டு விழும் தொகை 1982 இல் 8,500 கோடி டாலராக இருந்து 4,800 கோடி டாலராக 1983 இல் குறைந்தது.

எதிர்காலத்தை நோக்கும் போது, பல அபிவிருத்தியுறும் நாடுகள் தாம் ஏற்றுமதி செய்வதைவிட அதிக அளவில் இறக்குமதி செய்யும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம். தனியார் வளங்களில் இருந்து கிடைக்கும் நிகர நிதி மாற்றங்களும் வீழ்ச்சி அடையவே செய்யும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம்.

அபிவிருத்தியுறும் நாடுகளுக்குப் போய்ச் சேரும் மூலதனப் பரவல் குறித்து ஐரோப்பா, ஜப்பான், வட அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் கவலை தெரிவிக்கும் நிலை ஆரம்பமாகி உள்ளது. சர்வதேச நிதி முறைகளில் கடன் பிரச்சினையில் பெரியதொரு தாக்கத்தை இது உருவாக்கும் என்பதை முன்னெடுத்துக் காட்டுவதாகக் கொள்ளலாம். சர்வதேச நிதி முறை ஏற்கனவே பல பொருளாதாரப் புயல்களுக்குத் தாக்குப் பிடித்த வண்ணம் தான் இருக்கிறது. எனினும் இறக்குமதி வெட்டுகளாலும், கடனாளி நாடுகளின் அரசுகள் செலவு செய்வதாலும் அவற்றின் பொருளாதாரங்கள் மேலும் கஷ்ட நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளன.

மெக்சிக்கோ தனது அரசாங்கக் (பொதுக்) கடனை ஒரு வருடத்திற்குள் அரைவாசியாகக் குறைத்தது. 1981 ஆம் ஆண்டுக்கும், 1983 ஆம் ஆண்டுக்கும் இடையில் தனது இறக்குமதிகளை மூன்றில் இரண்டு பங்கினால் குறைத்துக் கொண்டது. ஐவரிகோஸ்ட் நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அரசாங்க முதலீட்டுத் திட்டங்களைச் சுமார் பாதியாகக் குறைத்துள்ளது. அந்த நாட்டில் தனி ஆள் வருமானம் மூன்று வருட காலத்தில் 20 சத வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. பிரேஸிலில் 1980 ஆம் ஆண்டிலிருந்து கைத்தொழில் வேலைவாய்ப்பு 20 சத வீதம் குறைந்து விட்டது. அந்த நாட்டின் உற்பத்தி அளவில் 25 சத வீதம் வீணே சோம்பிக்கிடக்கிறது.

அபிவிருத்தியுறும் நாடுகளில் சில, வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடனை முதலீடு செய்யாமல் நுகர்வுச் செலவுகளுக்குப் பயன்படுத்தின. கடன் பிரச்சினை உச்சக்கட்டத்தை அடைந்த 1982 ஆம் ஆண்டை அண்டிய ஒரு சில வருடங்களிலேயே அவ்வித செலவு அதிகமாக இருந்தது. கடனைப்பட்டுச் செய்ய வேண்டிய சரிக்கட்டல்களை உரிய வேளையில் செய்யாது ஒத்திவைத்த அந்த நாடுகள் இப்போது மேலும் சிக்கலான பல சரிகட்டல்களைச் செய்தாக வேண்டும். வெளிநாட்டுக் கடனைச் சரியான முறையில் பயன்படுத்திய நாடுகளில் சிலவும், சர்வதேசக் கடன் வழங்கல்களில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டன என்பது உண்மை தான். சும்மா கிடக்கும் இயந்திரங்களும், வேலையில்லாது சோம்பலாகத் திரியும் தொழிலாளர்களும் உள்ள நாட்டினுல் பெற்ற கடனை எப்படித் திரும்பச் செலுத்த முடியும்.?

கடன் பிரச்சினை, வளர்முக நாடுகளின் தனியார் துறை மீது பெரும் பாதிப்பான விளைவுகளைத் தோற்றுவித்திருக்கிறது. 1982 இல் வர்த்தகக் கடன் வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சியினுல் உத்தரவாதம் இல்லாத தனியார் கடன் படுநர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். மெக்சிக்கோ, சிலி போன்ற நாடுகளில் தனியார் நிதி நிறுவனங்கள் மீது அரசாங்கக் கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளன. அந்த வேளை வளர்முக நாடுகள் எங்கணும் ஆயிரக்கணக்கான நிறுவனங்கள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளன.

கைத்தொழில் நாடுகளில் வலுவான வளர்ச்சியும், எதையும் தாக்குப்பிடிக்கும் போக்கும் இருந்தால் நல்லது. அப்போது தான் ஏற்கனவே அதிக அளவு கடன் பெற்று அதனை மீளச் செலுத்தமுடியாத நிலையில் திண்டாடும் வளர்முக நாடுகள் தமது கடனைத் திரும்பக் கொடுக்கவும், தனி ஆள் வருமான வளர்ச்சியை மீண்டும் தொடங்கவும் கைத்தொழில் நாடுகளால் உதவ முடியும். ஆனுல் கடன் பெறும் நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளில் திருத்தங்கள் செய்யப்படுவது அவசியமாகும். இன்றைய கடன் பளுப்பிரச்சினையால் விளைந்துள்ள கஷ்டங்கள், அனேகமாக இன்னும் ஒரு தசாப்தத்துக்கு எம்மைப் பற்றிக்கொண்டே இருக்கும். சில நாடுகள் தாம் பெற்ற கடன்களுக்குரிய வட்டிக் கொடுப்பனவுகளைத் தேடிக் கொள்வதற்கு மிதமிஞ்சிய வர்த்தக வரவுகளை உருவாக்கிக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன. நியாய காலத் திட்டங்களினுல் நற்பயன்களை எதிர்பார்க்கும் பல நாடுகள் கூட குறுகிய கால நிதி உதவி பெறமுடியாத கஷ்டங்களால் பாதிப்புறலாம். கடன் கொடுப்பவர்கள் தொடர்ந்தும் அதனைச் செய்யமுடியுமா என்ற நிச்சயமில்லாத நிலையே அந்த அச்சத்துக்குக் காரணம் ஆகும். அதிக அளவில் மீள் அட்டவணை - திட்டமிடுதல் நடக்கும் என நம்பப்படுகிறது. அத்தோடு 1985க்கும் 1987க்கும் இடையில் கடன் வழங்கு - சேவையின் கடமைப்பாடுகள் பெரிதும் "விழுந்தெழும்பும்" என்று நாம் எதிர்பார்க்கிறேம். சர்வதேச நாணய சபையிடம் இருந்து பெற்ற கடன் வகையருக்களை மேற்குறிப்பிட்ட கால வாக்கில் திரும்பச் செலுத்த வேண்டி இருப்பதும் இதற்கு ஒரு முக்கிய காரணம் என்று சொல்லலாம்.

**அபிவிருத்தியுறும் நாடுகளின் பொருளியல் கொள்கைகள்**

உலகப் பொருளாதாரத்தை ஆரோக்கியமான நிலைக்கு மீட்டு எடுப்பதற்கு அக்கறையோடும் அவசரமாகவும் செய்ய வேண்டிய நான்காவது நடவடிக்கை அபிவிருத்தியுறும் நாடுகளின் பொருளியல் கொள்கைகளைத் திருத்திப் புதுக்கி அமைக்க வேண்டியதாகும். அப்போது தான் கைத்தொழில் வளநாடுகளின் வலுவான பொருளியல் மீட்சி, தாராள வர்த்தகம், அதிக மூலதனப் பரவல் ஆகிய மூன்றுக்கும் உறுதுணையாக நின்று உலகப் பொருளாதாரத்தைச் சீர்படுத்த வழி உண்டாகும்.

அபிவிருத்தியுறும் நாடுகள் தமது பொருளியல் கொள்கைப் புனரமைப்பை அவசரமாகவும் இறுக்கமாகவும் தொடர வேண்டும். ஏனெனில், அது, அந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கு வேண்டிய அடிப்படைத் தேவையாகும். வளர்முக நாடுகள் பலவற்றிலும் எந்தெந்த விதமான பொருளாதாரக் கொள்கைப் புனரமைப்புகள் தேவை என்பதை விரிவாக எடுத்துச் சொல்வது எனது நோக்கமல்ல. எனினும், தேவையான பொருளாதாரக் கொள்கைப் புனரமைப்புகள் பலகிளைப்பட்ட பாரிய அளவினதாக இருக்கும் என்பதையும், உரிய பலன் தருவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதையும் இரண்டோர் உதாரணங்களுடன் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கொள்கை முகாமைத்துவம் எப்போதும் கஷ்டமான காரியமாகும். அதுவும் அபிவிருத்தியுறும் நாடுகளில் இப்போது அதனைக் கையாள்வது விசேஷமாகக் கடினமானதாகும். ஏனெனில் அந்த நாடுகள் ஒரே நேரத்தில் இரண்டு பிரச்சினைகளை அணுக வேண்டிய நிலையில் உள்ளன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாடுகள் தமது சென்மதி நிலுவைகளைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு அவை தமது நிதி ஒழுங்கு முறைகளைத் திருத்தி அமைக்க வேண்டி உள்ளன. அதே வேளை அவை, தம்மிடம் எஞ்சியிருக்கும் வளங்களை, ஆகக் கூடுதல் பலனைத் தரக்கூடியனவும், மிக அவசியமானவையுமான திட்டங்களில் மட்டுமே மூலதனமிடும் விதத்தில் முதலீட்டுத் தரங்களைச் சீராக்க வேண்டிய நிலையிலும் உள்ளன. பொது முதலீட்டுத் துறையின் தரத்தை விருத்தி செய்வது என்பது மிகக் கஷ்டமானதும் மிகவும் கவனமான தீர்ப்புகளை எடுக்க வேண்டியதுமான பணியாகும். அதன் முழு விளைவுகளையும் அனுபவிப்பதற்குப் பல வருட காலம் செல்லும்.

நியாயமான கால எல்லைக்குள் பொருளாதார வளர்ச்சி காண்பதற்கு ஊக்கமளிப்பதற்கு வளர்முக நாடுகள் இன்னொரு மார்க்கத்தையும் கடைப்பிடிக்கலாம். தட்டுப்பாட்டின் தன்மையை பொருள்களின் விலைகள் பிரதிபலிக்கச் செய்வதே அந்த வழியாகும்; விலைகளைக் கண்டமாதிரித் திரிப்பதால் பொருளாதார வளர்ச்சி பின்னடிக்கப் படும் என்பதற்குப் பலமான பல ஆதாரங்கள் உள்ளன. சீரான ஒழுங்கு முறையில்லாது விலைகளை அடிக்கடி எழுந்தமானத்தில் மாற்றுவதால் குறைந்த வருமானம் உடைய மக்களின் வயிற்றில் அடித்து - அவர்களின் கஷ்டத்தில் - வசதி படைத்த ஒரு சிறு கூட்டத்தினருக்கு ஆடம்பர வாழ்க்கைக்கு வழி செய்யப்படுகிறது. அறுபதுகளிலும் எழுபதுகளிலும் வளர்முக நாடுகளில் மிகச் சிலவே விலை திரித்தலைக் குறைக்க ஓரளவு முயற்சி செய்தன. அவ்வாறு முயன்ற நாடுகளில் சிலவற்றில் பொருளாதார வளர்ச்சி உயரவும் செய்தது என்பதை மறைப்பதற்கில்லை. ஆனால் அவ்வாறான புரனமைப்புத் திட்டங்கள் பல கிளைப்பட்ட பாரிய அளவினவாகவும், அரசியல் ரீதியில் கஷ்டமானவையாகவும், குறுகிய காலச் செலவினங்களை ஏற்படுத்தக் கூடியனவாகவும் உள்ளன என்பது நிரூபணமாகி உள்ளது. ஆனால் ஒன்று, கண்டபடி விலை உயர்வுகளை அமுல் செய்வதனை - அதாவது விலைகளைத் திரித்துக் கொள்வதனை - படிப்படியாகவும், மெது மெதுவாகவும், தீர்மானத்துடனும் குறைத்துக் கொள்வது மிகவும் முக்கியம் என்பது நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பலவும் தமது சென்மதி நிலுவை நிலைமைகளைச் சீர் செய்வதற்கும், தங்கள் பொருளாதாரத்தைப் புனரமைக்கவும் தேவையான காத்திரமான கொள்கை ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்கனவே ஆரம்பித்து விட்டன. பொருளாதாரச் சீராக்கல்களை வேகமாகச் செய்யமுடியாது. அரசியல் ஸ்திரம், அரசியலோடு நெருக்கமாக மூட்டிச் செல்லும் தன்மை ஆகிய சூழல் காரணிகளால், பொருளாதாரச் சீராக்கல் நடவடிக்கைகளின் வேகத்தை கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டிய அவசியம் உண்டென்பதை மறந்து விடலாகாது. பொருளாதாரச் சீராக்கல் செய்முறை மிகக் கடினமானது; நாட்டுக்கு நாடு வெவ்வேறு விதமான விசேஷ "சரிக்கட்டல்கள்" கையாளப்பட வேண்டும். பொருளாதாரச் சீராக்கலுக்கு இலகுவான வழிமுறைகள் எதுவும் கிடையாது.

சர்வதேச நாணய சபை, சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வகுக்கப்படும் திட்டங்களுக்கு அல்லது கொள்கை அமுலுக்குத் தனது மூலவளங்களைப் பயன்படுத்துகிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பொருளாதார, சமூகத் துறைகளில் முன்னேற்றம் கண்டு புத்துயிர் பெறுவதற்கு உறுதுணையான சீர்திருத்தங்களை வகுக்கவும், செயற்படுத்தவும் உதவுவதே உலக வங்கியில் பணிபுரியும் எமது பொறுப்பாகும். அத்தகைய சீர்திருத்தங்களைச் செய்யும் போது கஷ்டமான கட்டமைப்பு மாற்றங்கள் உருவெடுக்கும்; அத்தோடு சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வருவதற்கும் சுமாரான காலம் செல்லும். ஆகையால் புதிய சீர்திருத்தங்களைச் செயலாக்குவதற்கு, ஏனைய வர்த்தக, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களோடு உலக வங்கியும் சேர்ந்து உதவுவது பொருத்தமானதே.

உலக வங்கியின் வருங்காலப் பங்களிப்பு எந்த வகையில் இருக்க வேண்டும் என்பது சம்பந்தமான பிரதிபலிப்பு குறித்து அதற்குள்ளேயே தீவிரமாக ஆராயத் தொடங்கி விட்டோம். எதுவானாலும் ஒன்று மட்டும் தெளிவாகி விட்டது. அதாவது அபிவிருத்தியுறும் நாடுகளில் சீரான பொருளாதாரக் கொள்கைகள் ஆழமாக வேரூன்ற உலக வங்கியின் உதவி கட்டாயம் முக்கியமானது. அதுவும் சில நாடுகளைப் பொறுத்தவரை வரும் ஆண்டுகளில் அவற்றின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியதாகவும் உள்ளது.

தொகுத்துக் கூறுவதாயின், உலகப் பொருளாதாரம் 1984 ஆம் ஆண்டு ஆரம்பத்தில், அதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்ததை விடச் சிறப்பானதாக இருந்தது. ஆனால் உலகளாவிய ரீதியில் வலுவான பொருளாதார வளர்ச்சி உள்ள புதிய சதாப்தத்தை அடைய வேண்டுமாயின் அபிவிருத்தியுறும் நாடுகள் பொருளியல் கொள்கை மாற்றங்களுக்கு விசேஷ முன்னுரிமை கொடுக்க வேண்டும்; அத்தோடு கைத்தொழில் வள நாடுகளின் பொருளாதாரக் கொள்கையையும், செயல் திறனையும் விருத்தி செய்வதற்கும், உலக வர்த்தகத்தைத் தாராளமாக்குவதற்கும், வர்த்தக மற்றும் உத்தியோக பூர்வ மூலதனச் செறிவை - விநியோகத்தை அதிகரிக்கச் செய்வதற்கும் நாம் (உலக வங்கியினர்) பணி புரிந்தாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

## நிகழ்ச்சிக் குறிப்பேடு

டின் ஆகக்கூடிய உயரமும் நீளமும் முறையே 122 மீட்டர்களும் (400 அடி) 507 மீட்டர்களும் (1,663 அடி) ஆகும். நீர்த் தேக்கத்தின் மொத்தக் கொள்ளளவு 72 கோடி 80 இலட்சம் கன மீட்டர்கள் (5,08,800 ஏக்கர் அடி).

10. திருகோணமலை அனல் மின்சாரத் திட்டத்துக்கு நிதியளிக்க 32640 எஸ். டி. ஆர். (சுமார் 8 கோடி 70 இலட்சம் ரூபா) கடனை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறுவதற்கு ஏற்பாடு செய்யும் ஒப்பந்தமொன்றில் இலங்கை கைச்சாத்திட்டது. திட்டத்துக்கான பொருள்களையும் சேவைகளையும் பெறுவதற்குக் கடன்பணம் பயன்படுத்தப்படும்.

12. திருகோணமலை எண்ணெய்த் தேக்கப் பண்ணையைப் புனருத்தாரணஞ் செய்யவும், அதை ஒரு சர்வதேச எண்ணெய்ச் சேமிப்புக்குதத்தின் தரத்துக்கு உயர்த்தவும் மூன்று நாடுகளைக் கொண்ட கூட்டு நிறுவனம் (மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த ஒயில் டாங்கிங், திராடிஞுப்ட் எஸ். ஏ. (ஒரு சுவிஸ்கம்பெனி), சிங்கப்பூரைச் சேர்ந்த ஒரேரூலியம் (பிரைவேட் லிமிட்டெட்) ஒன்றுடன் இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் கூட்டுமுயற்சி ஒப்பந்தமொன்றைச் செய்தது. எண்ணெய்த்தேக்கப் பண்ணையில் மொத்தம் பத்து இலட்சம் மெட்ரிக் தொன் எண்ணெய் கொள்ளக் கூடிய 99 எண்ணெய்த் தொட்டிகள் அடங்கியுள்ளன. இக்கூட்டு முயற்சியில் இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் 15 சத விகிதப் பங்குகளைக் கொண்டிருக்கும். செய்திட்டத்தின் மூலதனச்செலவு, அமெரிக்க டொலரில் 1 கோடி 60 இலட்சத்துக்கும் 2 கோடிக்கு மிடைப்பட்ட தொகையாயிருக்கும்.

20. மூன்று ஹோட்டல்கள் தங்களுடைய விஸ்தரிப்புத் திட்டங்களுக்கு மேலதிக வெளிநாட்டு நிதியளிப்புக் கோரிச் சமர்ப்பித்த விண்ணப்பங்களை வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் கமிட்டி நிராகரித்து விட்டதென இராஜாங்க அமைச்சின் பேச்சாளரொருவர் அறிவித்தார். "வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் கமிட்டி அங்கீகரித்த நியந்தனைகளுக்குப் புறம்பாகச் செயற்படுவதாகச் சந்தேகிக்கப்படும் உல்லாசப் பயணத் திட்டங்களை" இலங்கை உல்லாசப் பயண சபை இப்பொழுது உற்றுக் கவனித்து வருகிறதென்று அவர் கூறினார்.

21. துரிதப்படுத்திய மகாவலித்திட்டத்தின் கீழ் ஒரு முக்கியமான அமைப்பான மினிப்பே வடிநிலக்குறுக்குக் கால்வாய்திறந்து வைக்கப்பட்டது. இதுவே அண்மைக்காலத்தில் இலங்கையிலே கட்டப்பட்ட மிகப் பெரிய கால்வாயாகும். அதன் முழு நீளமான 19 மைல் தூரத்துக்கும் கொங்கிறீட் போடப்பட்டுள்ளது. இது மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் 'பீ' 'சி' அமைப்புக்களிலுள்ள 2,00,000 ஏக்கர் பரப்புள்ள புதிய காணிகளின் நீர்ப்பாசனத்துக்காக விக்டோரியா, ரந்தெனிகல நீர்த்தேக்கங்களிலிருந்து விடுவிக்கப்படும் மகாவலி நீரை உல்ஹிட்டிய ஓயாவுக்குத் திசைதிருப்பி விடும்.

30. ஒரு மலேரியாக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கும் (41 இலட்சம் அமெரிக்கடொலர் - ஏறக்குறைய 10 கோடி 40 இலட்சம் ரூபா) மகாவலி வடிநில அபிவிருத்திக்கும் (28 இலட்சம் அமெரிக்க டொலர் - ஏறக்குறைய 6 கோடி 90 இலட்சம், ரூபா) மேலதிக நிதிகளை வழங்க அமெரிக்க அரசாங்கத்துடன் இலங்கை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டுள்ளது.

குடிஜன மதிப்பு - புள்ளி விவரத்திணைக்களம் கணக்கிட்டவாறு, 1984 ஏப்ரல் மாத முடிவில் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் (கொழும்பு நுகர்வோரின் விலைக் குறியீட்டெண்) 548.9 ஐ எட்டி விட்டது. 1983 ஏப்ரல் மாத முடிவில் இது 460.0 ஆகவும் 1982 ஏப்ரல்மாத முடிவில் 412.6 ஆகவும் இருந்ததென்பது கவனிக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஷனல் பிரபிக் மெகசின் லிமிட்டட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org